சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்

லை இலக்கிய மாத இதழ். 2 அண

பாரதி மலர்

பிறப்பு : 11-12-1882

மறைவு : 11-9-1921

சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

"கை வருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்"—பாரதி

மலர் 1 இதழ் 5	செப்டம்பர் 1955	மன்மத ஆவணி

உள்ளே

வரலாற்றில் இம்மாதம்	...		3
பாரதி நோக்கு	...	ஆர். கே. கண்ணன்	5
முதல் சந்திப்பு	...	பரலி சு. நெல்லையப்பர்	17
மூலிகை விளக்கம்	...		20
எனது வேண்டுகோள்	...	வ. ரா.	21
தமிழர் பண்பாடு	...	தனிநாயக அடிகள்	24
பார்லிமெண்ட் அங்கத்தினர்-2	...	மாரிஸ் எபிங்ஹாம்	28
சோதிடப் புரட்டு	...	சி. செல்வி	31
ஸ்வர்ணகுமாரி	...	பாரதியார்	37
புதிய கோணங்கி	...	பாரதி	45
தேனீ	...	இயற்கை விஞ்ஞானம்-3	46
மங்கையர் திலகம்	...	சினிமா விமர்சனம்	47

அட்டைப்படம்: சமீபத்தில் சீனத்தில் சுற்றுப்பிரயாணம் செய்த இந்திய கலாசார தூதுகோஷ்டியில் அங்கம் வகித்த இந்திய அழகியும் பிரபல நடன ராணியுமான ஸ்ரீமதி இந்திராணி ரஹிமான் சீன நடிகர் இருவருக்கு இந்திய உடை அணிவித்து மகிழ்கிறார்.

பின் அட்டையில்: ஆகஸ்டு 15ல் கோவா சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டு துப்பாக்கி முனைகளுக்குமுன் வீரத்துடன் முன்னேறிச் சென்று தாய்த்திரு நாட்டுக் கொடியின் கவுரவத்தைக் காப்பதற்காகக் குண்டடிபட்ட வீரத் தமிழ்ப் பெண் ஸ்ரீமதி சுபத்ராபாய் சாகர்.

வரலாற்றில் இம்மாதம்

2-9-1945 : வியட்நாம் ஜன நாயகக் குடியரசு பிரகடனப் படுத்தப்பட்டது.

3-9-1939 : இரண்டாவது உலக யுத்தம் வெடித்தது.

4-9-1825 : இந்திய தேசீய இயக்கத்தில் முக்கிய தலைவரான தாதாபாய்நவுரோஜி பிறந்தார். இங்கிலாந்து பார்லிமெண்டில் அங்கம் வகித்த முதலாவது இந்தியர் இவர்தான். இவர் இரண்டுமுறை காங்கிரஸ் மகா சபையின் அக்ராசனராய் பதவி வகித்தார்.

5-9-1888 : இந்திய உதவி ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன் பிறந்தார்.

8-9-1943 : ஜெக்கோஸ்லோவேகியா நாட்டின் விடுதலை வீரனும், பிரபல எழுத்தாளருமான ஜூலியஸ் ப்யூசிக் நாஜிவெறியர்களால் தூக்கிலிடப்பட்டார்.

9-9-1828 : ருஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் பிறந்தார். 'யுத்தமும் சமாதானமும்' 'அன்னா கரீனா', 'புத்துயிர்' என்ற இவரது நாவல்கள் உலகப் புகழ்பெற்றவை. இவை தமிழிலும் வெளியாகியிருக்கின்றன. காந்திஜி இவரைத் தனது குருநாதர் என்று கொண்டாடினார்.

11-9-1823 : ஆங்கில நாட்டின் பிரபல பொருளாதார சாஸ்திரி டேவிட் ரிகார்டோ காலமானார்.

11-9-1897 : மனோன்மணியம் ஆசிரியர், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தனது 42வது வயதில் காலமானார்.

11-9-1921 : மகாகவி பாரதியார் காலமானார்.

11-9-1948 : பாகிஸ்தான் நாட்டை உருவாக்கிய மகமதலி ஜின்னா காலமானார்.

13-9-1872 : ஜெர்மன் நாட்டுத் தத்துவாசிரியர் லுட்விக் பர்பாக் காலமானார்.

14-9-1321 : இதாலியக் கவிஞர் தான்தே காலமானார்.

15-9-1803 : பிரெஞ்சு எழுத்தாளர் பிராஸ்பெர் மெரிமீ பிறந்தார். கிண்டலாக எழுதுவதில் இவர் பெயர்பெற்றவர். இவரது குறுநாவலான 'கார்மென்' பிஜெட்டி அவர்களின் சங்கீதத்தால் உலகப் புகழ்பெற்றது.

18-9-1931 : மஞ்சூரியாவை ஜப்பான் ஆக்ரமித்தது.

19-9-1802 : ஹங்கேரி தேசத்து அரசியல் மேதையும் விடுதலை வீரனுமான லாஜோஸ்

கோஷத் பிறந்தார். ஹங்கேரி நாட்டில் விஞ்ஞானம், கலை, இலக்கியம், நுன்கலை முதலிய துறைகளில் சிறந்த சேவை செய்பவர்களுக்கு 'லாஜோஸ் கோஷத் அவர்களின் பெயரால் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

21-9-1852 : பிரபல ஆங்கில நாவலாசிரியர் வால்டர் ஸ்காட் காலமானார்.

22-9-1862 ; நீக்ரோக்களை அடிமைகளாக வைத்துக்கொள்ளும் அநாகரீக முறையை அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் ஒழித்துக் கட்டினார்.

24-9-1541 : ஸ்விட்ஜர்லந்து தேசத்து ரசாயன சாஸ்திரியும் மருத்துவருமான பரசிலஸ் காலமானார். வெள்ளை, வெட்டை நோய்களைப் பற்றி இவர் ஆராய்ந்து கண்ட முடிவுகள் மிகவும் முக்கியமானவை. சிகிச்சைக்கு ரசாயன முறையில் தயாரான மருந்துகளை உபயோகிக்கும் வழக்கத்தை இவர்தான் முதன் முதலில் புகுத்தினார்.

27-9-1883 : பிரபல அரசியல் மேதை ராஜாராம் மோகன்ராய் காலமானார். பெண்கள் உடன் கட்டை ஏறும் வழக்கத்தை இவர் தடுத்து நிறுத்தினார்.

28-9-1895 : பிரெஞ்சு விஞ்ஞானி லூயி பாஸ்சர் காலமானார். இவரது ஆராய்ச்சிகளின் பலனாக தொத்து வியாதிகளை ஒழிப்பது சுலபமாயிற்று.

29-9-1849 : சோவியத் நாட்டு உடற்கூறு சாஸ்திரி இவான் பி. பாவலோவ் பிறந்தார். இவரது ஆராய்ச்சிகள், குறிப்பாக மூளை செயல்படும் முறை பற்றிய ஆராய்ச்சி உலகப் புகழ் பெற்றது. இவருக்கு 1904-ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

29-9-1902 ; பிரெஞ்சு நாவலாசிரியர் எமிலிஜோலா காலமானார்.

★

சரஸ்வதி

சந்தா விவரம்

தனிப்பிரதி	ரூ. 0—2—0
வருட சந்தா	ரூ. 1—8—0

சரஸ்வதி

1, ராஜா அண்ணாமலை செட்டியார்,

ரோடு, வெப்பேரி, சென்னை-7.

வேதங்களைப் போற்றும் பாரதி ருஷ்யப் புரட்சியை மெச்சுவதேன்? உபநிஷதங்களைப் போற்றும் பாரதி "பொய்ச் சாத்திரங்கள்" மீது சீறிப் பாய்வது ஏன்? லெனினுக்கும் சங்கராச்சாரியாருக்கும் முடிச்சுப் போடுவதில் "பகுத்தறிவு" உண்டா? பாரதி வேதாந்தக் கவியா அல்லது விடுதலைக் கவியா? இது ஒரு புதிர். அதை விளக்குகிறது இக்கட்டுரை.

பாரதி நோக்கு

[ஆர். கே. கண்ணன்]

பத்தொன்பதாவது நூற்றுண்டின் பிற் பகுதியில் உள்ளுக்குள்ளே குமுறலும் புகைச்சலும் இருந்தபோதிலும் வெளியே மொத்தத்தில் மனமொடிந்து, செயல் திறனிழந்து, சிந்தனை சாம்பிப்போய், அடிமை இந்தியா அன்னிய ஆட்சிக்குப் பயந்து வாழ்ந்து வந்தது. பழைமைப் புலம்பலுக்கோ, வீருப்புக்கோ இடந்தராமல் உள்ளது உள்ளபடியே இந்நிலைமையைப் பாரதி "நெஞ்சு பொறுக்குதிலையே" என்ற பாட்டில் கச்சிதமாகப் படம் பிடித்திருக்கிருன். புண்ணைக் கீறிக் கிளறிப் பார்த்த பிறகன்ரே நோயின் தன்மை தெரியும், மருத்துவமும் செய்ய முடியும்? "இந்த நிலை கெட்ட மனிதரை" எப்படி வர்ணிக்கிருன்?

அச்சப் பேய்க்கு அவர்கள் இரையானவர்கள்:

"அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே"

அடிமைப் பேய்க்கும் அவர்கள் இரை தான்.

"அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி
நெஞ்சம் அயர்வார்".

நிலை கெட்டுப் போனதற்கு அது மட்டுமல்ல காரணம். இன்னுென்றுண்டு.

"கொஞ்ச மோபிரி வினைகள்—ஒரு
கோடி என்ருல் அது பெரிதாமோ?"

இன்னும்,

"சாத்திரங்கள் ஒன்றும் காணுர்—
பொய்ச்
சாத்திரப் பேய்கள்சொல்லும்
வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன்ருயிருந்தாலும்—
ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்
திகழ்வார்."

ஒரு செங்கல்லுக்கு மேல் இன்னொரு செங்கல்லைக் காண முடியாதபடி தகர்ந்து போன அழிவுக்குவியலாக இருந்தது இந்தியச் சமுதாயம்.

"நண்ணிய பெருங் கலைகள்—பத்து நாலாயிரங்கோடி நயந்து நின்று"

இந்திய மக்கள் வாழ்ந்த இந்தப்

"புண்ணிய நாட்டினிலே—இவர் பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்."

அப்பப்ப! "பொறியற்ற விலங்குகள் போல்" என்று ஒரு சமுதாயம் முழுவதையுமே சுட்டி வர்ணித்து விட்டான்.

தயை, தாட்சண்யம், ஆத்ம திருப்தி, போலி கவுரவம், விவேக மற்ற வீண்பெருமை யாவற்றையும் உதறித் தள்ளி விட்டு உண்மையைப் பச்சையாக வர்ணிக்கும் அந்த விமர்சனப் பார்வை இருக்கிறதே, அது பாரதியின் மேன்மைக்கும் மேதா விலாசத்துக்கும் அடிப்படையானதொரு அம்சமாகும். அது இல்லாதவர்கள் எவரும் ஒரு பூர்ணத்துவ மெய்திய கலைஞனாக (Integrated artist) ஆக முடியாது, பூர்ணத்துவ மெய்திய கலையைச் சிருஷ்டிக்கவே முடியாது.

அதனால்தான், மேலே மேற்கோள் காட்டிய 'நொண்டிச் சிந்து' பாரதியின் இலக்கியத்துக்கு மட்டுமின்றி அவன் பிரதிபலித்த வேதாந்த தத்துவத்திற்கும், நடைமுறைக்கும், கவிதைப் பண்புக்கும், அவனது வாழ்க்கைக்கும் பகைப்புலனாக அமைந்துவிடுகிறது—இந்திய மக்களின் விடுதலைப் போருக்கே அது பகைப்புலனாக அமைந்துள்ளது போல.

ஆக, இந்தச் சூழ் நிலையில் சிக்கிய நிலை கெட்ட மனிதரை எங்கே அழைத்துச் செல்கிறான், எப்படி அழைத்துச் செல்கிறான் பாரதி? எந்தப் பாதையில் இட்டுச் செல்கிறான்? எந்தப் போர்க்கருவிகளுடன் போராடச் சொல்கிறான்? என்கிற கேள்விகள் இங்கு எழுகின்றன.

அரசியல் துறையில் திலகரையும், பின்னால் காந்திஜியையும் பின்பற்றியதைப்போலவே, தத்துவவிசாரத் துறையிலும் பாரதி அவர்களையே பின்பற்றுகின்றான். ராஜாராம் மோஹன் ராய், விவேகானந்தர், இராம கிருஷ்ண பரமஹம்சர், திலகர், காந்திஜி முதலானோர் அவரது தத்துவ விசாரணைக்கு வழி காட்டிகள். உள்ளுக்குள்ளே குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் மக்களை செயலாற்றத் தூண்டித் தட்டியெழுப்பி ஒன்றுபடுத்துவதற்கும், தன்னம்பிக்கை தரும் விதத்தில் ஒரு தெளிந்த பார்வை கொடுத்து மக்களை ஒரு மாபெரும் இயக்கமாக இயங்க வைப்பதற்கும், ஒவ்வொரு உண்மையான சரித்திர இயக்கத்துக்கும் ஒரு தத்துவம் தேவைப்படும். "மாற்று அல்லது மடிந்து போ" என்கிற புத்துயிரூட்டும் தாரக மந்திரம் தேவைப்பட்டது. செய்தல், செய்தல், செய்தல்—செய்தலின்றேல் சாதல், சாதல், சாதல் என்கிறமாதிரி செயலுக்கு, நடைமுறைக்கு, 'உயிர்த் துடிப்புக்

கொண்ட இயக்கத்திற்கு, அறை கூவியழைக்கும்படியான தத்துவ கோஷம் தேவைப்பட்டது. செயலும், இயக்கமும் எவ்வளவு மிதமாயிருந்தாலும் சரி, எவ்வளவு சீர்திருத்த வகைப்பட்டதாயிருந்தாலும் சரி, ஜடமாய் "பொறியற்ற விலங்குகளாய்" இருப்பதை விட்டு உயிர்ப்புடன் நகர்கிற, இயங்குகிற, முன்னேறுகிற திசையில் மக்கள் இறங்கினால் போதும். உறக்கத்தை உதறிவிட்டு எழுந்து நடக்கச் செய்வதே முதற் பெரும்பாடு. நடக்கச் செய்துவிட்டால் ஓடச் செய்வது எப்படி என்பதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம், அல்லவா?

இந்த மாபெரும் கைங்கர்யத்தைத்தான் விவேகானந்தர், இராமலிங்கசுவாமிகள், இராமகிருஷ்ணர், திலகர், காந்திஜி முதலானோர் செய்தனர். கருத்துமுதல் வாதத்தின்* வட்டத்திற்குள்ளிருந்தே இரு போக்குகள் எழுந்தன. தலைவிதி, ஊழ் வலி, பூர்வஜன்ம கர்மம் என்று கூறி சும்மா இருப்பதுவே சுகம் என்கிற போக்கு; உலகே மாயம், வாழ்வே அநித்தியம் என்று கூறி சமுதாயத்தையும், சமுதாயத்தைப் பீடிக்கும் பிரச்சினைகளையும் மறக்கும்படிச் செய்து மோட்சத்திற்குப் போக மோன நிஷ்டையிலிறங்குமாறு அழைத்துச் சென்ற போக்கு; என் செயலால் ஆவதொன்றில்லை, எல்லாம் அவன் செயல் என்று கூறி கருத்தும், கையும் செயலிழக்கச் செய்த போக்கு; சமுதாயக் குட்டையில் காலத்தால் படிந்த சகல அழுக்குகளையும் வழித்தெறிவதை சாத்திரங்கள் பேரால் மறுக்கும் எதிர்க்கும் போக்கு. இது ஒரு பக்கம்.

மற்றது, கர்மவினையையோ, விதியையோ மறுக்கவில்லை. ஆனால் மனித முயற்சி என்பது உண்டு, அதைச் செய் என்றது. பரலோகத்தை மறுக்கவில்லை, அதே சமயத்தில் இகலோக விஷயங்களையும் கவனி என்றது. வேதங்களை மறுக்கவில்லை, ஆனால் அதே சமயத்தில் மேலை நாட்டு விஞ்ஞான அறிவை உனதாக்கிக்கொள் என்றது. கடவுள் உபாசனையை மறுக்கவில்லை, ஆனால் அதே சமயத்தில் மனிதனையும் பிரத்யட்சப் பிரம்மமாக நேசித்துப் பணி செய் என்றது. ஆன்மார்த்திக விஷயங்களை மறுக்கவில்லை, ஆனால் அதே சமயத்தில் உலோகாயத விஷயங்களையும் ஆலோசித்து நட என்றது. சுருங்கச் சொன்னால், காயமே இது பொய்யடா என்னாதே, அந்தக் காயத்தை கடவுளின் கருவியாகப் பாவித்து

---

* **கருத்துமுதல் வாதம்:** என்றால், இந்தப் பிரபஞ்சத்துக்கு அப்பால் நின்று அதைச் சிருஷ்டித்து இயக்கி ஆட்சி செலுத்தும் சக்தி, அல்லது கடவுள், அல்லது பரப்பிரம்மம் ஒன்று உண்டு என்பது; ஐம்பொறிகளால் உணர்ந்தறியப்படும் பொருள் மாயை; பொருளைப்பற்றிய நமது கருத்து மட்டுமே உண்மை. கருத்துதான் முதல்; கருத்திலிருந்து பிறக்கும் பிரமைகள் பொருட்கள் யாவும் என்பது.

இகபர இன்பங்கள் இரண்டையும் தேடிக்கொள்ள உபயோகித்துக்கொள் என்றது. விவேகானந்தர் நூல்களில் விரவிக் கிடக்கும் கருத்துப் போக்குகள் இவை. "புதிய விதத்தில்" இந்திய வேதாந்தப் பொக்கிஷங்களுக்கு மெருகு பூசி செயல்படுத்துகிருர் என்று விவேகானந்தரையும் மற்றவர்களையும் புகழ்வதில் அடங்கியுள்ள விஷயம் இதுவே. கீதைக்கு திலகரும், காந்திஜியும் "புதிய" "உயிர்ப்புள்ள", வியாக்கியானம் செய்திருக்கிருர்கள் என்று புகழ்வதிலடங்கியிருக்கும் உண்மை இதுவே. பொருள் முதல் வாதத்தை மறுத்து நிராகரித்துக் கொண்டிருக்கிறபொழுதே, இந்தப் பணியை இவர்கள் செய்தனர்.

இது வெறும் வேதாந்தச் சர்ச்சையல்ல, மாபெரும் தத்துவ எழுச்சியாக "மறுமலர்ச்சியாக" அந்தக் காலத்தில் எழுந்தது. அந்தப் போர், கோயில் உபன்னியாச மடங்களில் நடக்கவில்லை. விவேகானந்தரும், பரமஹம்சரும் நாடு முழுவதிலும் சுற்றித் திரிந்து சமுதாயத்தையே கலக்குக் கலக்கு என்று கலக்கிவிட்டார்கள் அந்தக் காலத்தில், அந்தப் போரின் வடுக்கள் உங்கள் சிந்தையிலும், என் சிந்தையிலும், எல்லா இந்தியர்களுடைய சிந்தையிலும் இன்றும் இருந்து கொண்டுதானிருக்கின்றன. அந்த வடுக்களை ஏற்றுத் தாங்கிய பின்னர்தான் மார்க்ஸிய வேதாந்தத்தை நம்மவரில் சிலர் பலர் தழுவினர். இது சரித்திரம். இந்தப் போர் விளைத்த வேதாந்த விசாரணையின் ஒரு மறைமுக விளைவே மார்க்ஸிஸம். தொழிலாளி வர்க்கம் பிறந்து இயங்கி இந்த வேதாந்த விசாரணையில் இறங்கி இவற்றிற்கு எதிராக தன் பங்குக்கு தன் பெயரால் ஒரு புதிய தத்துவ ஒளியைக் காட்டிற்று. அதுவே மார்க்ஸிஸம்; இவ்வாறு முற்றும் *பொருள்முதல்வாத ரீதியான கற்பனையை விலக்கி பிரபஞ்சத்தை உள்ளது உள்ளபடியே பார்த்துச் செயல்புரியப் பயப்படாத, ஒரு வேதாந்தம் இந்திய சரித்திரத்தில் முதல் முதலாக எழுந்து செயல் புரியலாயிற்று. இது நவீன இந்தியாவின் பரம்பரை.

ஆனல் மார்க்ஸிஸம் தோன்றியது 1920க்குப் பின்னர்தான். அதற்குமுன் நடந்த வேதாந்தப் போர் முன் சொன்ன ரீதியில் தான் நடந்தது. அந்த உலைக் களத்தில் உருவான தத்துவப்

---

*பொருள்முதல் வாதம்: என்ருல், பிரபஞ்சம்தான் உண்மை: பொருள்தான் உண்மை. அவற்றிலிருந்துதான் கருத்து உதிக்கிறது; அவையின்றேல் கருத்து பிறப்பதற்கில்லை. எனவே, கருத்து என்பது பிற்பட்டது, பின்தோன்றியது. பொருளிலிருந்து பெறப்பட்டது. ஆக, பொருள் முதல். ஆக; கடவுள் என்கிற கருத்தைச் சிருஷ்டித்துவிட்டு அதுவே பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர்த்தா என்கிற கூற்று மறுக்கப்படுகிறது.

போர்க்கருவிகளே அந்தக் கால கட்டத்தில் உபயோகிக்கப்பட்டு மக்கள் இயக்கத்தை ஊக்கு வித்து முன்தள்ளிச் சென்றது. அந்த இரு போக்குகள் தாம் பழைமை சக்திகளுக்கும், புதிய முற்போக்குச் சக்திகளுக் கும் இடையே நடக்கும் போரைப் பிரதிபலித்தன.

எனவே இந்தத் தத்துவப் போரின் ஒலிகளும், எதிரொலி களும் பாரதி இலக்கியத்தில் அப்படியே கணீரென்று கேட்ப தில் ஆச்சரியமில்லை. அத்வைத வேதாந்தத்திற்குள் நின்று செய லையும், இயக்கத்தையும் வற்புறுத் தும் அம்சத்தைப் பாரதி பெரு மைப்படுத்துகிறான். பெருமைப் படுத்துவதில் அவன் தவறு செய்யவுமில்லை. ஏனெனில், அந்தக் காலத்துக்கு அது தவிர்க்க முடியாத, முற்போக்கு பாத்திரம் வகித்தது. சமுதாய சக்திகளைப் பின்னுக்கிழுத்துப் பிடிக்கும் போக்குள்ள, பின்னுக் குத் தள்ளும் போக்குள்ள தத்து வங்களையே சரித்திரமும், மக் களும் நிராகரிப்பர். ஓரளவுக்கா வது மக்களை இயங்கச் செய்யும் எந்தத் தத்துவமும் சிறுமை யடைவதில்லை அல்லவா!

இவ்விரு போக்குகளையும் "தமிழச்சாதி" என்ற பாடலில் அப்படியே படம்பிடித்திருக் கிறான் பாரதி. அந்தப்பாடலின் இறுதி வரிகளில் விதி பாரதிக்குக் கூறும் பதிலைப் பாருங்கள்.

"மேலே நீ கூறிய விநாசப்புலவரை
நம்மவர் இகழ்ந்து நன்மையும் அறிவும்
எத்திசைத் தெனினும் யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீராயின்
அச்சமொன்று இல்லை..."

"சத்ரபதி சிவாஜி" என்கிற அற்புதமான பாடலில்

"தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பான் வாழ்வு மோர் வாழ்வுகொல்?"

என்றும்,

'தாய்பிறன் கைப்படச் சகிப்ப வனாகி
நாயென வாழ்வோன் தமரிலிங் குனனே?',

என்றும் ஆக்ரோஷத்துடன் சவால் விடுத்து,

"பிச்சை வாழ்வு கந்து பிறருடை யாட்சியில்
அச்சமுற்றிருப்போன் ஆரிய னல்லன்"

என்று இந்திய மக்களுக்கு இடித்துரைத்து, விடுதலைப் போருக்கு எக்காளமிடுகிறான்:

"போரெனிலிதுபோர்! புண்ணியத் திருப்போர்
பாரினிலிதுபோற் பார்த்திடற் கெளிதோ?"

"ஆட்டினைக் கொன்று வேள்விகள் இயற்றி
வீட்டினைப் பெறுவான் விரும்புவார் சிலரே;
நெஞ்சக் குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சக மழிக்கும் மாமகம் புரிவம் யாம்.
வேள்வியில் இதுபோல் வேள்வி யொன்றில்லை
தவத்தினில் இதுபோல் தவம்பிறி தில்லை.',

யார்மீது அம்பு தொடுத்திருக் கிறான் பார்த்தீர்களா? "ஆட்டி னைக் கொன்று வேள்விகள் இயற்றி வீட்டினை (பேரின்ப வீட்டை)ப் பெற விரும்பும்

சிலர்" மீது. தாய் பிறன் கைப் படச் சகிப்பவர்கள் மீது.

"நம்ம ஜாதிக் கடுக்குமோ?" என்ற பாடலில் ஏகாதிபத் யத்தை அண்டிப் பிழைத்த நிதானக் கட்சியார் திலகரை "ஓய் திலகரே! நம்ம ஜாதிக் கடுக்குமோ?" என்று வினவிப் பின்னர் கூறும் கருத்துக்களைப் பாருங்கள் :

"சுதந்திரம் என்கிற பேச்சு—எங்கள்
தொழும்புக ளெல்லாம் வீணாய்ப்
போச்சு—இது
மதம் பிடித்தது போலாச்சு—எங்கள்
மனிதர்க்கெல்லாம் வந்ததேச்சு"
"வெள்ளை நிறத்தவர்க்கே ராஜ்யம்—
அன்றி
வேறெவருக்குமது தியாஜ்யம்—சிறு
பிள்ளை களுக்கே உபதேசம்—நீர்
பேசிவைத்த தெல்லாம் மோசம்."

"நாம் என்ன செய்வோம்" என்கிற வேறொரு பாட்டில் இதே புலம்பலும், வசைமாரியும்!

"திலகன் ஒருவனாலே இப்படி யாச்சு
செம்மையும் தீமையும் இல்லாமலே
போச்சு;
பலதிசையும் துஷ்டர் கூட்டங்க
ளாச்சு"
"பையல்கள் நெஞ்சில் பயமென்பதே
போச்சு
"தேசத்தில் எண்ணற்ற பேர்களுங்
கெட்டார்
செய்யுந் தொழில்முறை யாவையும்
விட்டார்.

என்று அங்கலாய்த்துக்
கொண்டு,

"தாமெத் தையோ "வந்தே"
யென்று துதிக்கிறார்
தரமற்ற வார்த்தைகள் பேசிக் குதிக்
கின்றார்"

என்று ஒப்பாரி வைக்கின்றனர்.

"குரு கோவிந்தர்" பாடலில் பாரதி தனது கண்ணோட்டத்தை ஆணித்தரமாகச் சொல்கிறான்.

"ஒன்றும் கடவுள், உலகிடைத்
தோன்றிய
மானிட ரெல்லாஞ் சோதரர்; மானிடர்
சமத்துவ முடையார்; சுதந்திரஞ்
சார்ந்தவர்.
சீடர்காள்! குலத்தினும் செயலினும்
அனைத்திலும்
இக்கணத் தொட்டு நீர் யாவிரும்
ஒன்றே.
பிரிவுகள் துடைப்பீர்! பிரிதலே
சாதல்,
ஆரியர் சாதியுள் ஆயிரஞ் சாதி
வகுப்பவர் வகுத்து மாய்க, நீர்
அனைவரும்
தருமம், கடவுள், சத்தியம், சுதந்திரம்
என்பவை போன்ற எழுந்திடும் விரச்
சாதி யொன் றனையே சார்ந்தோ
ராவீர்.
....
அரசனில்லாது தெய்வமே யரசா
மானிடர் துணைவரா, மறமே பகை
யாக்
குடியர சியற்றுங் கொள்கையார்
ஜாதி"

கடவுள் உபாசனையினூடே "மானிடர் சமத்துவமுடையர்; பிரிவுகள் துடைப்பீர்; ஆயிரஞ் சாதி வகுப்பவர் வகுத்து மாய்க" என்று சீறுகிறான்.

மக்களின் சித்தத்தை காளி யின் மிதேற்றிப் பாடுவதும் பாரதியின் வேதாந்தப் பார்வை.

"மாகாளி பராசக்தி உருசிய நாட்
டினிற் கடைக்கண் வைத்தாள்,
அங்கே
ஆகா வென்றெழுந்தது பார் யுகப்
புரட்சி:
கொடுங்காலன் அலறி விழ்ந்தான்."

லெனின் தலைமையில் நடந்த யுகப்புரட்சிக்கு மாகாளியின் கடைக்கண் நோக்கு உண்டாம். ஏகாதிபத்யத்துக்கு உடுக்கை யடித்து எல்லா மதகுருக்களும் தூற்றித் திரிந்த அந்தக் காலத்

தில், இந்த யுகப்புரட்சியின் சமுதாய உண்மையைத் தனது அத்வைதத் திருஷ்டியோடு கூடவே கண்டு களித்து ஆர்ப்பரிக்கிருன் பாரதி. லெனினுடைய வழிமுறையை பாரதி மறுக்கிருன்; என்ருலும் ருஷ்யாவுக்கு அது முற்றிலும் சரிதான் என்று ஒப்புக்கொள்கிருன்.

இவ்வாறு காளி உபாசனை வழியே சமுதாயச் செயலுக்கு பாரதி தன்னையும் மக்களையும் ஊக்குவிப்பதை எண்ணற்ற பாடல்களில் பார்க்கலாம். சின்னஞ்சிறுவிஷயத்திலும் காளியை பாரதி மறக்கமாட்டான். "காணி நிலம் வேண்டும்—பராசக்தீ" என்று வேண்டுகிருன். "எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—எங்கள் இறைவா, இறைவா, இறைவா!" என்று உள்ளம் பூரிக்கிருன். அருணகிரியாரையும் தாயுமானுரையும் உதாரணத்திற்கு ஞாபகப்படுத்திக் கொண்டால் "எத்தனை கோடி இன்பம் வைத்தாய்" என்ற வரி விரக்திப் பிரலாபத்துக்கு வேட்டு வைப்பதை உணரலாம். இத்தனைக்கும் பாரதி ஒரு அன்ருடங் காய்ச்சி, சில சமயம் அதுவுமில்லை. வறுமையும், பசியும் தொடர்ந்து அவனைத் தொத்திக் கொண்டிருந்தன; நாடுவிட்டு நாடு செல்ல வேண்டியவனுனன்...... இருந்தபோதிலும், 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—இறைவா!" என்று மெய்சிலிர்க்கிருன். பாரதியின் தன்னம்பிக்கை இமயத்தினும் பெரியது; வாழ்வு மீது அவனுக்குள்ள பற்றும் பிடிப்பும் மனிதத்துவத்தின் உச்சியைக் குறிக்கிறது. இவ்வளவுக்கும் பராசக்திக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுதான் சொல்கிருன். காரணம், காளியின் அவதாரமாக மக்களைப் பார்த்து நேசித்து வணங்கியதே. பாரதத் தாயையே அன்னை, பராசக்தி, பயங்கரி என்று விளித்து வரங் கேட்கிருன். அன்னையின் பிரதாபங்களைக் குறித்துத் துள்ளிவருகுது வேல் என்று எதிரிகளை எச்சரிக்கிருன்.

இசைக்கும் கவிதைக்கும் சரஸ்வதியைப் பூஜிக்கிருன். ஆனுல் அதே சமயத்தில் மக்களிடையேயிருந்து இசை பிறப்பதையும் வர்ணிக்கிருன். உழைப்புடன் இணைந்தியங்கி, இயற்கையின் நாத ஜால அழகைப் பருகி, வெளிப்பட்டதே இசையின் பூர்வோத்திரம். பாமர இசையிலிருந்துதான் சாஸ்திரீய இசை வளர்ந்து மேம்பட்டது. சாஸ்திரீய இசையின் வளர்ச்சிக்குப் பாமர இசை ஜீவ வேர்களாயிருக்கின்றது. இசை ஞானம் எப்படியெல்லாம் தன்னிடையே வந்து புகுந்தது என்பதைக் குயில் பாட்டில் பாரதி வர்ணிப்பதைப் பாருங்கள்:

"கானப்பறவை கலகலெனும்
ஓசையிலும்,
காற்றுமரங்களிடைக் காட்டும்
இசைகளிலும்,
ஆற்றுநீரோசை அருவியொலியி
னிலும்,
நீலப்பெருங் கடலெந் நேரமுமே
தானிசைக்கும்
ஓலத்திடையே உதிக்கும் இசை
யினிலும்,

மானிடப் பெண்கள் வளருமொரு
காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்
தேன் வாரியிலும்,
ஏற்ற நீர்ப்பாட்டின் இசையினி
லும், நெல்லிடிக்குங்
கோற்றொடியார் குக்குவெனக்
கொஞ்சும் ஒலியினிலும்,
சுண்ணமிடிப்பார்தஞ் சுவை
மிகுந்த பண்களிலும்
பண்ணைமடவார் பழகு பல
பாட்டினிலும்,
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்
கரங்கள்தா மொலிக்கக்
கொட்டியிசைத்திடுமோர் கூட்ட
முதப்பாட்டினிலும்,

. . . .

. . . நெஞ்சைப் பறிகொடுத்தேன்
பாவியேன்"

உழைப்பாளி மக்களையும், அவர்களிடையே யிருந்து நாள் தோறும் ஊற்றெடுத்துக்கொண்டிருக்கும் இசைப்பெருக்கையும் பாரதி நேசிப்பதற்கு எல்லை தான் உண்டா? இவ்வளவுக்கும் அவன் சரஸ்வதியைக் காதலிக்கின்ருன். வேண்டுமானால், "கலைமகளை வேண்டுதல்", "வெள்ளைத் தாமரை" முதலான பாடல்களைப் பாருங்கள்.

இயற்கையையும் அத்வைதக் கண்கொண்டு சக்தி வடிவமாகக் காண்கிருன். ஞாயிறு, காற்று, தீ, கடல் முதலியவை பற்றி அவன் வரைந்துள்ள வசன கவிதைகள் அற்புதமானவை. அவற்றை வணங்கிப் போற்றுகின்ருன். உதாரணத்திற்கு ஒன்று தருகிறேன். "புலவர்களே, மின்னலைப் பாடுவோம், வாருங்கள்!" என்று அழைத்து மின்னலை ஸ்துதி செய்வதைப் பாருங்கள்.

நமது விழிகளிலே மின்னல்
பிறந்திடுக.
நமது நெஞ்சிலே மின்னல் விசிறிப்
பாய்க.
நமது வலக்கையிலே மின்னல்
தோன்றுக.
நமது பாட்டு மின்னலுடைத்தாகுக.
நமது வாக்கு மின்போல் அடித்திடுக.
மின் மெலியதைக் கொல்லும்;
வலியதிலே வலிமை சேர்க்கும்.
அது நமது வலிமையை வளர்த்
திடுக',

இந்த வரிகளைப் படித்தாலே நமது உடலிலும், சிந்தையிலும் வலிமை ஊற்றெடுக்கிறது. இத்தனைக்கும் கருத்துமுதல்வாதத் திருஷ்டியுடன்தான் இவற்றை எழுதினுன். "அக்னிக் குஞ்சு" என்று ஒரு பாடலை எழுதியிருக்கிருன். அது பின்வருமாறு:

"அக்னிக்குஞ்சொன்று கண்டேன்
—அதை
அங்கொரு காட்டிலோர்
பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு;—தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்
றும் உண்டோ?
தத்திரிகிட தத்திரிகிட தித்தோம்."

ஐந்தே வரிகள்: பாரதி இலக்கியத்தை வர்ணிக்க இவை போதும். அவனது பாப்பா பாட்டு முதல் பாஞ்சால சபதம் வரை எல்லா சிறிய பெரிய பாடல்களும் அக்னிக் குஞ்சுகளே. அவற்றைப் படிப்பவர்களின் உள்ளம், தீயுண்ட காடுபோல், வெந்து தணிந்து புதிய தேஜஸும் புதிய ஜீவனும் பெற்றெழுகின்றது. பாரதியைத் தொடு முன் நாம் இருந்த மாதிரி தொட்ட பின் இருக்கவே முடியாது. பாரதியே ஒரு அக்னிக் குஞ்சு! தத்திரிகிட தத்திரிகிட தித்தோம் என்று சிரித்துக் குதித்துக்கொண்டு வந்து உங்

கள் உள்ளப் பொந்துகளிலே நுழைந்துவிடுகிறான்.

பிரபஞ்சமே சக்தியின் வடிவம், சக்தியின் இயக்கம், சக்தியின் செயல் என்பது பாரதியின் தத்துவத் திருஷ்டி. மனித முயற்சி பராசக்தியின் சித்தத்தின் பாற்பட்டதொரு அம்சம் என்று குறித்து வரவேற்றுப் போற்றுகிறான். காதல், கற்பு, பெண் விடுதலைமுதல், மறவருக்குமிங்கு தீய புலையருக்கும் விடுதலை உள்ளிட்டு, ஜாதி பேதங்கள் ஒழிப்பு வரை சகலவற்றிலும் மாறுதலை வேண்டி உழைக்கிறான் பாரதி. பழைய சாத்திரக் குப்பைகளை உதறிவிடச் சொல்கிறான்.

ஆகவேதான் அந்தந்தக் காலத்திய வேதாந்தப் போர்களின் தன்மையையும், வளர்ச்சி திசையையும் கண்டு அந்தந்தக் காலத்துக்கு அது சமுதாயத்தை மொத்தத்தில் முன்னுக்கோ பின்னுக்கோ தள்ளினவா என்று பார்க்க வேண்டும். இந்திய நாட்டு வேதாந்தப் போர்கள் லேசானவையல்ல. அந்தந்தக் கட்டத்தில் நாட்டின் வாழ்வையே அவை பாதித்துச் சீர்திருத்தி முன்னுக்குத் தள்ளியுள்ளன. பௌத்தமும், ஜைனமும் வெளிப்பட்டு பல நூற்றாண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்தது. வீர சைவ, வீர வைஷ்ணவ இயக்கமும் இஸ்லாமிய மதத்துக்கும், பிராமணிய முறைக்கும் ஈடு கொடுக்கக் கிளம்பின. ஆழ்வார்கள், நாயன்மார்கள் தோற்றுவித்த பக்தி மார்க்கம் நாட்டை பல நூற்றாண்டுகளாகக் கவ்வியது. கபீர், நாமதேவர், சைதன்யர் முதலானோரின் இயக்கங்களும் பரவின. இவை யாவும் அன்றைய ஆளும் வர்க்கங்களுக்கும், ஆளப்பட்ட வர்க்கங்களுக்குமிடையே பொருளாதாரத் துறையிலிருந்து ஆத்மீகத் துறை வரை நிலவிய உயர்வு தாழ்வான நிலையை எதிர்த்துச் சீர்படுத்தத் தோன்றியவையே. எனினும், நிலப் பிரபுத்துவ முறைக்கு மாறான, அதிக முற்போக்கான, பொருளாதார முறை வளராததினால் இவை யாவும் சீர்திருத்திச் சமரசம் செய்து கருத்து முதல் வாத வட்டத்திறகுள் சுற்றிச் சுற்றி வந்து தனித்தனி மதங்களாகவும், ஜாதிகளாகவும், வகுப்புகளாகவும் படிந்து உறைந்து விட்டன. என்றாலும் அவை எழுச்சி கொண்ட காலத்தில் அவை வகித்த சரித்திர முக்கியத்துவத்தை நாம் புறக்கணிக்க முடியாதல்லவா ?

பாரதி இலக்கியத்தைப் படிக்கையில் பாரதியின் தத்துவ திருஷ்டியை யாரும் புறக்கணிக்க முடியாது. அதன் போக்கையும் சரித்திரத்தில் அது அக்காலத்தில் வகித்த முற்போக்கான பாத்திரத்தையும் யாரும் புறக்கணிக்க முடியாது.

மேலைய நாடுகளின் தத்துவப் போர் சென்ற போக்கு ஒரு வகை ; நம் நாட்டில் அது சென்ற போக்கு வேறு வகை.

மேலைய நாடுகள் பெரும்பாலானவற்றில் மத்திய கால

நிலப்பிரபுத்துவ பிற்போக்குச் சமுதாயத்தையும், அச் சமுதாயக் கருத்துக்களையும் எதிர்த்து நடந்த புரட்சியில் பொருள் முதல் வாதிகள் தலைமை வகித்தனர். பொருள் முதல் வாதம் பலம் பெற்று மார்க்ஸிஸம் தோன்றுவதற்கு உதவியது.

நம் நாட்டில் விடுதலைப் போர்க்களத்தில் ஆரம்பத்தில் கொடி ஏந்தி முன் சென்றது விவேகானந்தர், திலகர் முதலானோரின் அத்வைத வேதாந்தத்தைச் சார்ந்த போக்குதான். அதற்குப்பின்னர், இடைக்காலத்தில்தான் மார்க்ஸிஸம் வந்தது.

மேலைய நாடுகளில் பிற்போக்குச் சக்திகள் மதத்தையும், கடவுளையும் காட்டி விடுதலைப் போரையும், புரட்சியையும் எதிர்த்தன. அவைகளுக்கு எதிராக பொருள் முதல் வாதம் போராட வேண்டியதாயிற்று.

நம் நாட்டில், அன்னிய ஏகாதிபத்யத்துக்கும், உள் நாட்டு நிலப்பிரபுத்துவப் பிற்போக்குக்கும் உதவியாக இருந்தவர்கள் பரலோக யாத்திரை பற்றிப் பேசி மாயாவாத அம்சமுள்ள வேதாந்த சரரத்தைப் பொழிந்தனர். அவர்களை எதிர்த்து திலகரும், காந்திஜியும் போராடினர். ஆரம்பத்திலிருந்தே பொருள்முதல்வாதிகள் கையில் போர்க்கொடி இருக்கவில்லை.

இருக்கவும் முடியாது. இந்திய சமுதாயத்துப் பொருளாதார வளர்ச்சியின் பிற்பட்ட நிலை, விஞ்ஞான வளர்ச்சியில்—குறிப்பாக இயற்கை இயல் துறை வளர்ச்சியில் — இருந்த பிற்பட்ட நிலை, அடிமைத் தனத்தின் விளைவாக ஏற்பட்ட கலாச்சார வீழ்ச்சி, கல்விக் குறைவு முதலியன இதற்குக் காரணம்

ஆயினும் விவேகானந்தர், திலகர், காந்திஜியின் தத்துவ விசாரணை சமுதாயச் செயலை ஓரளவுக்குத்தான் ஒப்புக் கொள்கின்றன. அது குறிப்பிடுகிற எல்லையை மீறி மக்கள் முன்னேறத் தயாரானால் "அந்தராத்மாவின்" பெயரால் அதே மக்களை இழுத்து நிறுத்தியதைச் சரித்திரம் சுட்டிக் காட்டுகிறது. சமுதாயக் கேடுகளை அடியோடு பைசல் செய்ய மக்கள் முயற்சித்தால் "பாபம், பலாத்காரம், அதர்மம்" என்ற கூக்குரல் எழுந்ததையும், எழுவதையும் இந்தியா அறியும்.

இதற்கு அர்த்தம்: மாற்றம் வேண்டும்; ஆனால், அடியோடு மாற்றம் கூடாது. செயல்வேண்டும்; ஆனால் புரட்சிகரமான செயல் கூடாது. ஒருவகைச் சுரண்டல் முறையை ஒழிக்கலாம் ஆனால் இன்னொரு வகைச் சுரண்டல் இருக்க வேண்டும். இதற்காகத்தான் விதியையோ, கடவுளையோ, கருத்து முதல் வாதத்தையோ அடியோடு கைவிடத் தயாரில்லை. எல்லா வகைச் சுரண்டலையும் ஒழிக்கக் கங்கணம் கட்டியிருப்பதால்தான் மார்க்ஸிஸம் முழுக்க முழுக்கப் பொருள் முதல் வாதமாக அமைந்துள்ளது. சமுதாயம் செயல்பட்டு முன்னேறும் பாதையில் எந்த

விதமான தடையையும் போடாமல் வழிகாட்டிச் செல்லும் தத்துவத்தை மார்க்ஸிட்டுகள் பின்பற்றுகின்றனர். அதனுல்தான் கருத்து முதல் வாதத்தை நிராகரித்து எதிர்க்கின்றனர்.

அதே சமயத்தில் கருத்து முதல் வாத முகாமுக்குள்ளேயே நடக்கும் போராட்டத்தின் வர்க்கத்தன்மையை நாம் மறக்கவில்லை, மறக்கக் கூடாது. நிலப்பிரபுத்துவ சக்திகளும், முதலாளித்துவ சக்திகளும் ஒரே வேதாந்த வட்டத்திற்குள் வெவ்வேறு அம்சங்களை வலியுறுத்தி பின்னுக்கிழுக்கவோ, முன்னுக்கிழுக்கவோ முயற்சித்துப் போராடுவதும், சமரசம் செய்வதும், மீண்டும் போராடுவதும், மீண்டும் சமரசம் செய்துகொள்வதுமான போக்கை நாம் கவனிக்க வேண்டும். இல்லாவிடில் நாட்டில் நடக்கும் வேதாந்தப் போரை அதன் முழு வடிவத்தில் காணத் தவறியவர்களாவோம்.

திலகர், காந்திஜியின் தத்துவப் போக்கு அன்று வளர்ந்துவந்த முதலாளி வர்க்கத்தினுடையது; அதனுல்தான் முரண்பாடுகள் கொண்டது. செயல்புரியச்சொல்லும் அம்சமும், செயலறச் சொல்லும் அம்சமும் ஒருங்கே பிணைக்கப்பட்டுள்ள தத்துவப்போக்கு அது. இப்படி முரண்பட்டிருப்பதால்தான் பழுத்த காந்தீயவாதிகளில் சிலர் பலர் நவசீனப்புரட்சியை ஏற்றிப் போற்றுவதை ஒரு முரண்பாடாகக் கருதுவதில்லை.

எனவே இந்தத் தத்துவப் போக்கை மார்க்ஸிஸ்டுகள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், எதிர்த்தாலும், அதைப் புரிந்து கொள்கிருர்கள். அதற்குள்ள சமுதாயச் செயல்திறனை உன்னிப்பாகக் கவனிக்கிருர்கள். சமுதாயச் செயல்களில் இறங்குகையில் அவர்களுடன் தோள் சேர்க்கின்றனர். அதோடு, சமுதாய நடவடிக்கைக்கு முட்டுக்கட்டைபோடும் அதன் மற்ருரு போக்குக்குப் பரிகாரம் தேட அதை விமர்சித்து மார்க்ஸிஸ்ட் வேதாந்தத்தை மக்களிடையே பலப்படுத்துவதையும் காண்கிருேம்.

இந்தச்சரித்திர திருஷ்டியுடன் தான் பாரதியையும், பாரதி கவிதைகளையும் நாம் சீர்தூக்கிப் பார்க்கிருேம். அவனது தேசீயப் பாடல்கள் மட்டுமன்றி, மற்றப் பாடல்களும் நம்மால் ரசிக்க முடிகிறது எந்த எதிரிகளை பாரதி எதிர்த்தெழுதுகிருன் என்பதையும், எந்தக் காலத்தில் எழுதினுன் என்பதையும் ஞாபகப் படுத்திப் பார்க்கும் பொழுது! அந்தக் காலத்தில் வாழ்ந்த தமிழ்மக்களின், இந்திய மக்களின் மேதாவிலாசத்துக்குப் பாரதி ஒரு தலைசிறந்த பிரதிநிதி.

பாரதி இலக்கியம் முழுவதும் இந்திய சமுதாயச் சரித்திரத்திலும், இந்திய இலக்கியச் சரித்திரத்திலும் ஒரு மகோன்னதமான ஸ்தானம் வகிக்கும் என்பதில் ஐயமில்லை. கம்பனும், வள்ளுவனும், இளங்கோவும் தத்தம் காலத்திய தேவைகளைப்

பூர்த்தி செய்து தமிழையும், தமிழ் மக்களையும் சிறப்பித்தது போல தன் காலத்திய கடமைகளை உணர்ந்து தன்னேரில்லா கவிதா சக்தியுடன் பாரதி சேவை செய்தான். தமிழ் இலக்கியத்திலேயே முதல் தடவையாக விடுதலைக்கவி என்று வாகை சூடினன். சுதந்திர ஆர்வம் தமிழனின் இதயத்தில் குடிகொண்டிருக்கும் வரையில் பாரதியும் தமிழனின் தோழனுக இருப்பான். நமது தோள்மீதும், நமது சந்ததியார்கள் தோள் மீதும் அன்னியோன்னியத்துடன் கையைப் போட்டு பாரதி தனது அமரக்குரலில் பேசிக் கொண்டே நடந்து வருவான். காலம் நீள நீள, அவனது குரலின் வலிமை வானேக்கி வளர்ந்துகொண்டே யிருக்கும். ஏனெனில் வளர்ச்சியின் நுனியில், இயக்கத்தின் நுனியில், பாரதி என்றும் வீற்றிருக்கிறன். சருகைச் சாடுகிறன்; தளிரை நேசிக்கிறன், வளர்க்கிறன்!

“தம்பி! உள்ளமே உலகம். ஏறு!
ஏறு! ஏறு! மேலே, மேலே, மேலே!
உனக்கு சிறகுகள் தோன்றுக.
பறந்து போ, பற! பற!—மேலே,
மேலே, மேலே!

....தமிழ், தமிழ், தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனல் புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம்—தமிழில் ஏறிக்கொண்டே போகவேண்டும்.”

புதிய புதிய உண்மை! புதிய புதிய இன்பம்! தேடிச்செல்! சென்று கொண்டேயிரு! பாரதியின் கட்டளை இது! பாரதியின் பரம்பரை இது!

பாரதி நினைவு

பாரதியைப்பற்றி இன்று பலர் எழுதுகிறார்கள். பாரதி காலத்தில் வாழாதவர்கள்கூட பாரதியுடன் தாங்கள் பழகியதாகக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாரதியுடன் நெருங்கிப் பழகியவர்களில் ஒரு சிலர் இன்னும் உயிருடன் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் அறிந்த பாரதியைப் பற்றி எழுதினால் தமிழ் மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். திரு. பரலி சு. நெல்லையப்பர் பாரதியுடன் நெருங்கிப் பழகியவர். பாரதியாரைப்பற்றி அவர் ஒரு விரிவான புத்தகம் எழுதவேண்டும் என்று சகலரும் எதிர்பார்க்கிறார்கள். நண்பர்களின் ஓயாத வேண்டுகோள்களுக்குப் பின்னர் சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் ஒரு முறை அவர் புத்தகம் எழுத ஒத்துக்கொண்டு எழுதவும் தொடங்கினார். இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டுரைதான் புத்தகத்தின் முதல் பகுதி. இது 'சக்தி'யில் வெளியானது. இதுவரை புத்தகத்தை அவர் எழுதி முடிக்கவில்லை. இது தமிழ்நாட்டின் துரதிருஷ்டமே.

முதல் சந்திப்பு

பரலி சு. நெல்லையப்பர்

★

1908-ம் ஆண்டென்று நினைக்கிறேன். இற்றைக்கு முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னே, தூத்துக்குடியில் தேசபக்தர், திருவாளர் சிதம்பரம் பிள்ளையவர்கள் தலைமையில் நடந்துவந்த சுதேசிக் கப்பற் கம்பெனியில் நான் ஒரு சிறிய குமாஸ்தாவாகப்பணியாற்றிக்கொண்டிருந்தேன். எனது தமையனார் 'வந்தேமாதரம்'ஷண்முகசுந்தரம் பிள்ளை—மேற்படி கப்பற் கப்பெனியின் (ஏஜண்டு) பிரதிநிதிகளில் ஒருவராகச் சோழநாட்டில் ஊர்ஊராகச் சுற்றிக் கம்பெனிக்குப் பங்குசேர்த்

துப் பெருந்தொண்டு செய்து கொண்டிருந்தவர், தூத்துக்குடிக்கு வந்திருந்தார். காலஞ்சென்ற எனது அருமைத்தம்பி குழந்தைவேலன்—அவன்தான் சிதம்பரம் பிள்ளையவர்களின் பெருந்தொடர்பை நான் பெறுவதற்கும், அதன் வாயிலாக நான் எனது வாழ்நாளில் இளமையில் ஒரு புதிய மாறுதல் பெறுவதற்கும் காரணமாயிருந்தவன்—பிள்ளையவர்கள் அணுக்கத் தொண்டனாய், அவர்களுடனே யிருந்தான். நாங்கள் மூவரும் விடுதிகளில் உணவு உண்டு கொண்டிருந்தபோதிலும் பகற்பொழுதில் ஓய்வுநேரங்களைப் பிள்ளையவர்கள் வீட்டிலேயே கழிப்பது வழக்கம். இராப்பொழுதில் சிவன்கோயில் தெருவிலிருந்த பிள்ளையவர்கள் வீட்டுப் பெருந் திண்ணையிலே படுத்துறங்குவது வழக்கம்.

ஒருநாள் காலை பத்துமணியிருக்கலாம். பிள்ளையவர்கள் வீட்டின் முன்பகுதியில் நான் வழக்கமாயிருக்கும் அறையில் இருந்துகொண்டிருந்தேன். அப்போது ஒருவர் அங்கேவந்து எதிர்பாராதமுறையில் எனது கையைப் பற்றி என்னை வெளியே உலாவுவதற்கு அழைத்துக் கொண்டுபோனார். அவர்தான் பாரதியார். அவரை எனக்கு முன்னே தெரியாது. பாரதியார் பாடிய சுதேச கீதத் துண்டுப் பிரசுரங்கள் எனது அறையில் ஏராளமாகக் கிடந்தன. இளம் பச்சைக் காகிதத்தில் நாலெ பக்கம் அழகாக அச்சிடப்பட்டிருந்த அந்தப் பிரசுரத்தில் "வந்தே மாதரம் என்போம்", "ஜயஜய பாரத", "எந்தையும் தாயும்", "வாழிய செந்தமிழ்" என்னும் நான்கு சிறந்த பாடற்றொகுதிகள் அடங்கியிருந்தன. அந்த அற்புதமான பாடல்களை முதல்முறை படித்த நான், புத்துயிர் பெற்றிருந்தேன். காலஞ்சென்ற திருமயிலைச் செல்வர் வெ. கிருஷ்ணசாமி ஐயர் அந்தப் பாடல்களைப் பாரதியார் வாயினாலேயே பாடக்கேட்டு வியப்பும் உவப்பும் அடைந்தவராய், அவற்றைப் பதினாயிரக் கணக்கில் அச்சிட்டுச் சிறப்பாகப் பள்ளிக்கூடங்களில் பரப்பும்படி ஏற்பாடு செய்திருந்தார் என்ற செய்தியைப் பின்னர் அறியலானேன்.

'இந்தியா' என்ற தமிழ் வாரப் பத்திரிகையும் அந்தக் காலத்தில் சிதம்பரம் பிள்ளை விட்டிற்கு வரும். அது புதுமையான முறையில் நடந்துவந்தது. பாரதியார் தான் அதன் ஆசிரியராகயிருந்தார். தமிழ்ப் பத்திரிகை யுலகில் அது புதிய காலத்தைத் தொடங்கியதென்று சொல்ல வேண்டும். 'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியரும், சுதேச கீதங்களின் ஆசிரியருமான சுப்ரமணிய பாரதியார் அவர் என்று தெரிந்தபொழுது நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

அன்று நான்கண்ட பாரதியாரின் கோலம் எனக்கு இன்னும் நினைவிலிருக்கிறது. வயதுசுமார் இருபத்தைந்திருக்கலாம். ஆறு முழச் சுதேசி வேட்டியைத்

தார்ப்பாய்ச்சி உடுத்தி யிருந்தார். (கதர் அப்பொழுது தோன்றவில்லை. தென் ஆப்ரிக்காவில் இருந்த காந்தியடிகள் உள்ளக் கருவில் இருந்தது.) சட்டையும், கோட்டும் போட்டிருந்தார். கிராப் தலையைச் சீவி விட்டிருந்தார். அகன்ற, நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு. அறிவொளி வீசும் முகம்; அன்பு நிலவும் விழிகள். கழுத்திலே தூய வெண்மையும் இளஞ் சிவப்பும் கலந்த பட்டு அங்கவஸ்திரம். அந்த அங்க வஸ்திரத்தை நான் எந்நாளும் மறக்க முடியாது. பிற்காலத்தில் நெடுநாள் வரை புதுவையிலும் பாரதியார் கழுத்தை அந்த அங்க வஸ்திரம் அழகு செய்துவந்தது.

தூத்துக்குடியில் முடிசூடா மன்னராக விளங்கிய சிதம்பரம் பிள்ளை மீதும், சுப்ரமணிய சிவா, பத்மநாப ஐயங்கார் இருவர் மீதும் திருநெல்வேலியில் ஜாமீன் வழக்கு ஏற்பட்டிருந்தது. பின்னர் அது பிள்ளை மீதும் சிவா மீதும் ராஜத்துவேஷ வழக்காக மாறியது. சிதம்பரம் பிள்ளையையும் அவர் நண்பர்களையும் பார்ப்பதற்காகப் பாரதியாரும் வேறு சில நண்பர்களும் திருநெல்வேலிக்கு வந்திருந்தார்கள். பாளையங்கோட்டையில் சிறைக்கோட்டத்தில் இருந்த மூவரையும் கண்டு உரையாடினர். ஜில்லாக் கலெக்டர் எல். எம். விஞ்சு துரையின் அடக்குமுறையினல் கலக்கமுற்றிருந்த திருநெல்வேலியையும் தூத்துக்குடியையும் நேரில் கண்டு நிலைமையை அறிந்து கொள்வது பாரதியார் நோக்கமா யிருந்தது. சிதம்பரனர் முதலிய மூவர்மீதும் ஏற்பட்ட வழக்கில் அவர்களுக்காகத் தோன்றிய திருநெல்வேலி நியாயவாதிகளான சாது கணபதி பந்துலு, கணபதி ராமையர், டி. வி. கிருஷ்ணசாமி ஐயர், ஸ்ரீவைகுண்டம் தி. ரா. மகாதெவ ஐயர், சிவராம கிருஷ்ண ஐயர் முதலிய தேசபக்த நண்பர்களுடன் திருநெல்வேலி வீரராகவ புரத்தில் இந்துக் கல்லூரிக்கு அருகில் இருந்த சாது கணபதி ஆபீஸ் மேடையில் பாரதியாரும் அவர் நண்பர்களும் ஒருவாரம்வரை தங்கியிருந்தார்கள். சிதம்பரனர் வழக்கு விஷயங்களைப் பற்றிப் பேசியும், பாட்டுப் பாடியும் பாரதியும் அவர் நண்பர்களும் காலம் கழித்துச் சென்றார்கள்.

இந்தத் தருணத்தில்தான் பாரதியார் கலெக்டர் விஞ்சுக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும் நடந்த வாக்குவாதமாக

நாட்டில் எங்கும் சுதந்தர
வாஞ்சையை, நாட்டினய்
கனல் மூட்டினய்

என்று தொடங்கும் பாடல்களையும்,

சொந்த நாட்டில் பிறர்க்
கடிமை செய்தே துஞ்சிடோம்
இனி அஞ்சிடோம்

என்று தொடங்கும் பாடல்களையும் பாடினரென்று பின்னர் அறிந்தேன்.

பாரதியார் திருநெல்வேலிக்கு வந்ததை யொட்டித் திருவாளர் சிதம்பரம் பிள்ளையின் முயற்சிக்கெல்லாம் நிலைக்களனாக விளங்கித் தென்னாட்டுப் பாரிஸா லென்று பேர்பெற்றிருந்த தூத்துக்குடிக்கும் வந்தார். காலையில் சிதம்பரனார் வீட்டில் தங்கியிருந்த பாரதியார் மாலையி லேயே திருநெல்வேலிக்குத் திரும்பிவிட்டதாக அறிந்தேன். காலையில் எனைக் கைப்பற்றிய பாரதியார் என்னிடம் அதிகமாக ஒன்றும் பேசவில்லை. திருநெல்வேலிக்குத் திரும்பிப் போகும்பொழுது என்னிடம் சொல்லிக்கொண்டு போகவும் இல்லை.

★

மூலிகை விளக்கம்

செங்கீரைத் தண்டு: *செங்கிரைத் தண்டின் சிறப்புகளைப் பற்றிக் 'குணபாடம்' கூறுகிறது:*

செங்கிரைத் தண்டது தான் தீராத பித்தத்தைத்
தங்காமல் ஓட்டிவிடும் தையலர்க்குப்—பொங்கும்
பெரும்பாட்டை நீக்கும் பெரிய கறியாந்
தரும்பாடு வேப்பகற்றுந்தான்.

அதாவது தீராத பித்த நோயையும், பெண்களுக்குண்டாகும் பெரும்பாட்டையும் பிரலாப சந்நிபாத சுரத்தையும், செங்கீரைத் தண்டு தீர்க்கும்.

* * *

மார்ஜால மோஹினி: *'மார்ஜால மோஹினி' என்ற அதிசயமான பெயரைப் படைத்தது குப்பை மேனி என்ற பச்சிலை. இதன் குணாதிசயங்களைக் குறித்து 'தேரையர்' கரிசல் கூறுவதாவது:—*

தந்த மூலப் பிணி தீத் தந்திடுபுண் சர்வ விடம்
உந்து குன்மம் வாதம் உதிரமூ—லந்தினவு
சூலஞ்சு வாசம் தொடர் பீந் சங்கம்போல்
ஞாலங்கொள் மேனி யதனல்.

அதாவது, குப்பை மேனிப் பச்சிலையால் தந்த மூல நோய், தீச்சுட்ட புண், தாவர சங்கம விடங்கள், வயிற்று வலி, வாத ரோகம், ரத்த மூலம், நமைச்சல், குத்தல், இரைப்பு, பீநசம், கபாதிக்கம் ஆகியவை தீரும்.

எனது வேண்டுகோள்

வ. ரா.

மனித வர்க்கத்திற்கு உய்வு, கலையும் கவிதையும்தான். பார்க்கு மிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண ஆனந்தம் கவிதைதான். தத்துவத்திலே தர்க்கம் நிறைந்திருக்கலாம். பௌதீக சாஸ்திரத்திலே அறிவு மிதந்து கிடக்கலாம். மதத்திலே பக்தி பூரித்து நிற்கலாம். காதலிலே கனிவும் கீதமும் குழைவும் மண்டிக் கிடக்கலாம். கலையிலே அழகும் ஆனந்தமும் விம்மி விழிக்கலாம். ஆனால், இவைகள் எல்லாவற்றையும் தனக்கு அங்கங்களாகக் கொண்டிருக்கும் கவிதையைக் கடவுள் என்று நான் போற்றுகின்றேன். ஒப்புயர் வில்லாத கவிதையைப் பாடியவர் சுப்ரமணிய பாரதியார் என்று நான் உரக்கக் கூறுகிறேன். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, உலகத்துக்குக் காட்சியளிக்கும் வளர்பிறை பாரதியார் என்று சொல்லுகிறேன். வானை நோக்கிக் கைகள் கூப்பித் தொழுது நிற்கும் பக்தர்களுக்கு உயிரும் உற்சாகமும் அளித்து உரப்படுத்தும் சூரியன் பாரதியார் என்று வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பண்டிதர்கள் பொருமினாலென்ன? பாமரர்கள் உறங்கினாலென்ன? இங்கிலீஷ் படித்த இளைஞர்கள் இறுமாப்பினால் உளறினாலென்ன? பாரதியார் இன்னல் வாய்ப்பட்டு அகால மரணமடைந்தாலென்ன?

"அவர் தொடாதது ஒன்றும் இல்லை. தொட்டதை அழகு படுத்தாமலும் விட்டதில்லை" என்று டாக்டர் ஜான்ஸன், கோல்ட்ஸ்மித் என்ற மேதாவி எழுத்தாளரைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். இதையே இன்னும் அதிகமான அழுத்தத்துடன் பாரதியாரைப் பற்றிச் சொல்ல முடியாதா? பாப்பா முதல் பாட்டிவரையில், காதலன் முதல் காதகன்வரையில், பதிதன் முதல் பக்தன்வரையில், கசடன் முதல் காந்திவரையில், அன்பன் முதல் அரக்கன் வரையில், பாரதியார் யாரை, எதைத் தொட்டு அழகு செய்யவில்லை?

பாரதியாரின் கவிதை, ஆழமும் கரையும் காணமுடியாத கடலாகும். பாரதியாரை போகியும் போற்றுவான்; யோகியும் போற்றுவான். ஆகாயத்திலிருந்து விழும் நீர்த்துளிகள் யாவும் எப்படியோ கடலுக்குப் போய் சேர்ந்து விடுவதுபோல, பல்வேறு தன்மைகள் கொண்ட

மனித உள்ளங்கள், மகா கவி என்ற அலையிலாப் பெருங்கடல் உள்ளத்தில் போய் அடங்கிவிடு கின்றன. ஆகவே, மகா கவி எல்லோருக்கும் சொந்தம்; எல்லா நாடுகளுக்கும் பொது. இங்கிலீஷில் எழுதியதால் ஷேக்ஸ்பியர் போன்றவர்கள் மகா கவிகள் ஆகவில்லை. எல்லோர் உள்ளங்களையும் கவரு கின்ற தன்மை அவர்களிடம் இருப்பதால்தான் அவர்கள் மகா கவிகள்.

பாரதியாரின் கவிதையிலே நகைச் சுவை வேண்டுமா? இருக்கிறது. சோகம் வேண்டுமா? உண்டு. அற்புதம் வேண்டுமா? அபரிமிதமாக உண்டு. ஆத்திரம் வேண்டுமா? கொள்ளை கொள்ளையாய்க் கிடைக்கும். ஆறுதல் வேண்டுமா? ஏடு ஏடாய் இருக்கிறது, வேதாந்தம் வேண்டுமா? பத்தி பத்தியாய் பார்க்கலாம். வளர்த்திக்கொண்டு போவானேன்! எது இல்லை?

பாரதியாரை நினைத்தால் எனக்குப் பயமாயிருக்கிறது. ஏன்? நேற்றைக்குப் படித்த கவிதையை இன்றைக்குப் படித்தால் புதிது புதிதாக அழகும் பொருளும் சுவையும் கண்ணுக்குத் தென்படுகின்றன. நாம் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்து கொண்டு போகிறோமோ, அதற்குத் தகுந்தாற்போல பாரதியாரின் கவிதை என்ற சங்கப்பலகை. நீண்டுகொண்டே போய் நமக்குத் தங்குமிடம் கொடுக்கிறது. இது என்ன விசித்திரமான கவிதை!

1943-ம் வருஷ பாரதியார் கொண்டாட்ட வைபவ வாரத்தில் ராஜாஜி சொன்னதாவது: "மாகாண பாஷைகளில், அதாவது வங்காளி, தெலுங்கு, குஜராத்தி, மராத்தி, போன்ற பாஷைகளில் சென்ற முன்னூறு வருஷ காலமாக பாரதியாரைப் போன்ற கவி தோன்றவில்லை. பாரதியார் தமிழ்நாட்டில் திருஅவதாரம் செய்தது தமிழர்களுக்கு கிடைத்த பாக்கியமாகும்."

நிகரில்லாத தமிழ்ப் புலவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், "இது பாரதி சகாப்தம். தமிழர்களின் உள்ளத்திலும், வாழ்க்கையிலும் பாரதி உன்னத புரட்சியை உண்டாக்கிவிட்டார். பாரதியின் கவிதை, தாகூரின் கீதாஞ்சலியைக் காட்டிலும் உயர்ந்தது. பாரதி உலக மகா கவி" என்று சொன்னார்.

ஒன்றைமட்டும் தமிழர்கள் அனைவரும் நன்றாகக் கவனிக்க வேண்டும். வங்காளி பாஷையிலிருந்தும், ஹிந்தியிலிருந்தும், இப்பொழுது ஏராளமாகக் கதைகளைத் தமிழ்ப்படுத்தி, வருகிறார்கள். அதற்குக் காரணம் என்ன? தமிழிற் சிறந்த எழுத்தாளர்கள் இல்லை என்பதா? பாரதியாரின் வழிபற்றி, அதிசயிக்கத் தக்க திறமையுடன் எழுதும் எழுத்தாளர்கள் பலர் தோன்றியிருக்கிறார்கள். அப்படியிருந்தும், தமிழுக்கு ஏன் இன்னும் சரி

யான மதிப்பு ஏற்படவில்லை? ஜாதிப் பிரிவினையும், சில்லறைப் பொருமையும்தான் இதற்குக் காரணங்கள் என்று திட்டமாகச் சொல்லிவிடலாம். தமிழ் இலக்கியத்தின் மூலமாகத்தான் தமிழர்களின் மனதைப் பண்படுத்த முடியும் என்பதைப் பாரதியார் வெகு அழகாக எடுத்துக் காண்பித்திருக்கிருர். அதற்காகத்தான் 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்' என்று பாரதியார் தமிழர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிருர். அதைத் தலைமேற்கொண்டு, உலகத்திலுள்ள எல்லா ரஸமான விஷயங்களையும் தமிழில் கொண்டுவந்து சேர்க்க, நம்மில் ஒவ்வொருவரும் அரும்பாடுபடவேண்டும். பாரதியார்தான் தமிழ். பாரதியாரிடம் பக்தி செலுத்துபவர்கள், தமிழுக்கும் தேசத்துக்கும் தொண்டு செய்யத்தான் வேண்டும்.

இதுதான் எனது வேண்டுகோள்.

★

அவர் கவலை

பெர்னுட் ஷாவுக்கு எழுபது வயது வரையில் மாதத்துக்கு ஒரு முறை தாங்க முடியாத தலைவலி வந்து கொண்டிருந்தது. கடின தேகாப்பியாசமோ தேக உழைப்போ கொஞ்சம் கூடச் செய்யாததால் தான், இந்தத் தலைவலி வந்தது என்று ஷா கருதினர். வட துருவத்தைக் கண்டு பிடித்துப் பிரபலமான நான்ஸேன் என்ற விஞ்ஞானி ஒரு சமயம் ஷாவுக்கு அறிமுகம் செய்விக்கப்பட்டார்.

"தலைவலிக்கு நீங்கள் ஏதாவது மருந்து கண்டு பிடித்திருக்கிறீர்களா?" என்ருர் ஷா.

ஆச்சரியமடைந்த நான்ஸென், "இல்லை" என்ருர்.

"தலைவலி மருந்து கண்டு பிடிக்க, என்றேனும் நீங்கள் முயற்சித்ததுண்டா?" என்று மறுபடியும் ஷா கேட்டார்.

"இல்லை"

"பேஷ் இது ரொம்ப ஆச்சரியமாய் இருக்கிறதே! எங்கேயோ யாருக்கும் கவலையில்லாத வட துருவத்தைக் கண்டு பிடிக்க, உங்கள் ஆயுளையெல்லாம் செலவிட்டிருக்கிறீர்கள். ஆனல் ஒவ்வொரு மனிதனையும் கதறும்படி செய்யும் தலைவலிக்கு மருந்து கண்டு பிடிக்க, நீங்கள் முயற்சி கூட எடுக்கவில்லை என்கிறீர்களே!" என்ருர் ஷா.

தமிழர் பண்பாடு

★

தனிநாயக அடிகள்

★

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்றார் பாரதியார். தமிழ் என்றால் இனிமை. பண்பாடு என்றால் வாழும் வழி. உள்ளத்தில் இனிமையும், உண்மை ஒளியும், சிந்தனைச் செல்வமும் செழிக்கும் வாழ்க்கைவழி தமிழுக்கும் பண்பாட்டுக்கும்தான் எவ்வளவு பொருத்தம்! அன்பும் அருளும் கமழும் அழகு வாய்ந்த சிந்தனையின் வழியிலே எழுப்பப்பட்டதொரு வாழ்க்கை வழிதான் தமிழர் பண்பாடு.

தமிழர் பண்பாடு, அதன் பழமையும் இக்கால நிலையும் எதிர்காலமும் என்பது பற்றி தமிழர் சார்பு கழகத்தின் ஆதரவில் தனிநாயக அடிகளார் கொழும்பு நகர மண்டபத்தில் ஆற்றிய விரிவுரையின் சுருக்கம் இந்தக் கட்டுரை. இலங்கையிலிருந்து வெளிவரும் 'ஈழகேசரி' வார இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

ஈழநாட்டிலே, நினைவுக் கெட்டாத காலத்திலிருந்தே நிலைத்து வந்துள்ளது தமிழர் பண்பாடு. சிங்கள மக்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னரேயே உயர்ந்த நாகரிகம் ஒன்று இங்கு உயிர்வாழ்ந்தமையை மகாவம்சமே ஒப்புக்கொள்கிறது. இலங்கையிலே பல காலமாகத் தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்து வந்தார்கள் என்ற வரலாற்றுண்மை, சிங்கள தமிழ்ப் பண்பாடுகள் பல்லாண்டு காலமாக அருகருகே அமைதியாகச் செழித்து வளர்ந்ததொரு காலத்தைத்தான் சுட்டிக் காட்டுகிறது.

சேர சோழ பாண்டிய மன்னர்களுக்கும் ஈழத்தரசர்களுக்குமிடையிலே பூசல்களும் போர்களும் நிகழ்ந்துவந்தன என்பது உண்மையேயாயினும் அவை உடன்பிறந்த சோதரர்களுக்கிடையிலே ஏற்படும் பிணக்குகள் போன்றவையே. சிலர் இப்போர்களை மிகைப்படுத்திக் கூறி, சிங்கள, தமிழ்ப் பண்பாடுகள் அடிப்படையிலேயே முரணானவை என்று சாதிக்க எண்ணு

கிறார்கள். சிங்களத்திலும் தமிழிலுமுள்ள இலக்கியங்களை, இலக்கணங்களை, நாடகத்தை, கலையை, நடனத்தை ஒப்பு நோக்கி ஊன்றியாராயும்போது இவ்விரண்டு பண்பாடுகளுக்குமிடையிலே பொதுவாக அமைந்துள்ள அடிப்படை அம்சங்கள் நன்கு புலப்படும். ஈழத்திலேயுள்ள கதிர்காமமே, இவ்விரண்டு பண்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று உறவுமுறை கொண்டாடி வந்திருக்கின்றன என்பதற்குப் போதிய சான்றாகும். நாட்டிலே இரு வேறு சமயங்கள் இருந்து வந்தாலும்கூட ஒரு சமயத்தவர் மறு சமயத்தைப் போற்றிப் பாதுகாக்காது விடவில்லை. பெருமை வாய்ந்த பௌத்த விகாரங்களில், சிங்களம், பாளி என்பவையோடு தமிழ் மொழியும் இடம் பெற்று வீற்றிருந்தது. தமிழ் மக்களே பௌத்த பிக்குகளாக மாறிய காலமும் ஒன்று இருந்தது.

தமிழ் பேசும் மக்கள் வதியும் பிரதேசங்களிலே கூடப் பௌத்த விகாரங்கள் எழுப்பப்பட்டன. பௌத்த மதம் தமிழ் மக்களை எவ்வளவு தூரம் கவர்ந்துள்ளதென்பதற்கு மணிமேகலையென்ற காவியமே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தமிழ் மொழி இவ்வீழநாட்டிலே மூவாயிரம் ஆண்டுகளாகவே வழங்கி வருகின்றது. ஈழத்துக் கவிஞர்கள் இயற்றிய தமிழ் கவிதைகள் சங்கத் தொகை நூல்களிலேகூட இடம்பெற்றிருக்கின்றன.

ஒரு மொழி அம்மொழி பேசுவோரின் மேதாவிலாசத்தின் அழியாத சின்னமாகும். தமிழ் மொழி தென்னாட்டிலே மூன்று கோடி மக்களின் நாவிலே வாழ்கிறது. இலங்கையில் இரண்டு கோடி மக்கள் இம்மொழியைப் பேசுகிறார்கள். இன்னும் மலாயா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளிலும் பலரிடையே தமிழ் வழங்கிவருகிறது. தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி; பழமை வாய்ந்தமொழி. அத்துடன்கூட ஏறக்குறைய நாலு கோடி மக்களின் நாவிலே நடமாடி வருகிறது, உயிர்த் துடிப்போடு.

தமிழ், கிரேக்க மொழியிலும் பார்க்கக் கருத்துக்களை ஐயந்திரிபறக்கூறும் ஆற்றலிலும் மெருகிலும் உயர்வுபடைத்த மொழியாகும். தமிழ் நுணுக்கமான கருத்துக்களைத் தர்க்கரீதியாக வெளியிடக்கூடிய மொழி. தமிழ் மக்களது கவிதைக் காதல், உயர்ந்த தத்துவங்களின் உச்சியையே எட்டிப் பிடித்துவிட்ட 'காதல்' என்ற கோட்பாடு, இவைகளைக் கண்டு உலகமே வியக்கிறது. திருக்குறளிலே வகுத்து உரைக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்க்கை வழியை நோக்கி, அந்நூலிலுள்ள திறமான புலமையைப் பிறநாட்டார் வணக்கம்செய்கிறார்கள்; வியந்து பாராட்டுகிறார்கள்.

ஆங்கிலம் வர்த்தக மொழியாக இருக்கிறது; பிரெஞ்சு இராசதந்திர மொழியாகத் திகழ்கிறது. ஜெர்மன் தத்துவ ஞான

மொழியாக இலங்குகிறது, இத்தாலியும் காதல் மொழியாக விளங்குகிறது; தமிழோ அன்பு மொழியாக, அருள்மொழியாக, பக்திமொழியாக வாழ்கிறது.

தமிழ் இலக்கியம் தமிழர்களது வாழ்க்கை அனுபவங்களிலிருந்து கடைந்தெடுத்த இலட்சியங்களை எடுத்துப் பேசும் அருஞ் செல்வமாக விளங்குகிறது. கற்பனைத் திறத்தின் காட்சிச் சாலையாக, இயற்கை வாழ்வின் எடுத்துக்காட்டாக உள்ளன தமிழ் இலக்கியங்கள்.

வெளியுலகத்தோடு, வணிக மூலமாகத் தமிழர்கள் ஏற்படுத்திக்கொண்ட உறவு, உலகத்தைப் பரந்த கண்களோடு, விரிந்தசிந்தனையோடு பார்க்கும் பண்டைத் தமிழர்களிடை உருவாக்கித் தந்தது; யாதும் ஊரே! யாவரும் கேளிர் !!" என்ற ஓருலகச் சித்தாந்தத்தைத் தமிழன் என்றோ கண்டுவிட்டான்; கண்டு கொண்டாடினான்.

தமிழர் வாழ்க்கையின் இரு கண்களென விளங்கினவை வீரம், புகழ் என்னும் இரு பெரும் இலட்சியங்கள்.

பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடல்கள் செய்து கொண்டுள்ளமையும் தமிழ் மொழியின் தனித் தன்மையாகும். சைவ நாயன்மார்களின் பாடல்கள் தமிழிலே உள்ளன. வைணவ ஆழ்வார்களின் பாடல்கள் தமிழ் மொழியில் இருக்கின்றன. இன்னும் கத்தோலிக்க, பௌத்த, இஸ்லாமிய மார்க்கத்தினரும் தமிழிலே கவிதை படைத்திருக்கிறார்கள்.

இவ்வாறெல்லாம் விளங்கிய தமிழர் பண்பாட்டின் இன்றைய நிலையை எண்ணும்போது உள்ளது வெதும்புகிறது. இன்றைய தமிழர்களிடத்திலே தமிழ்க் காதல் இன்னும் இருந்துவருகிறது. எனினும் புத்தம் புதிய சிந்தனைகள், முயற்சிகள் என்பன இன்றைய தமிழர்களிடையே காணக்கிடைப்பது அரிதாகிவிட்டது. பண்பாட்டைப் பாதுகாப்பதும் பரப்புவதும் அவசியமாகும். சென்ற ஐம்பது ஆண்டுகளாகத் தமிழரிடையே ஒரு மறுமலர்ச்சி — தமிழ்ப்பற்று வளர்ச்சி—காணப்படுகிறது.

இன்று தமிழ் மக்களிடையே உயர்ந்த சிந்தனைகளை—உலகுக்கு உபயோகமாகக்கூடிய சிந்தனைகளைக் காணமுடியவில்லை. தத்துவஞானம் தேவதைகளுக்கு மட்டும் உரியதல்ல. ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் அது உரியதேயாகும். உலக மொழிகளிலே பெயர்க்கும் தகுதி வாய்ந்த எழுத்துக்கள் சமீப காலத்துத் தமிழுலகிலே மிகமிக அருகிவிட்டன. மேடைத் தமிழைப் பொறுத்தமட்டிலே கருத்துக்கு முக்கியத்துவம் குறைந்து, ஒலி விசித்திரங்கள் முதலிடத்தைப்பெற்றுவிட்டன. வானொலி, செய்தித்தாள், சஞ்சிகைகள், தங்கள் கடமையைச் சரிவரச் செய்யத் தவறிவிட்டன. இலங்கை வானொலியில் தமிழ் தமிழாக உச்சரிக்கப்படுவதில்லை என்பதை இங்கு குறிப்பிடலாம்.

இன்றைய தமிழகத்திலே நாம் ஒரு சிறந்த ஓவியத்தையோ சிற்பத்தையோ சிருட்டித்ததாமில்லை. என்ன இருந்தாலும் தமிழகத்திலே இன்று ஒரு விழிப்பு ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்ப் பண்பாடு தழைக்க வேண்டுமானால், சமூக வாழ்விலே தமிழ் வழங்கவேண்டும். கல்வி தமிழிலே நடைபெற வேண்டும்.

பல்கலைக் கழகங்களிலே பயிலுமளவிற்குத் தமிழ்வளர்ச்சி பெற வேண்டும். கலை, அறிவியல் முதலிய துறைகளிலே இன்று ஏற்பட்டுள்ள வரட்சி, தமிழ்ப் பண்பாட்டின் உயிர் நிலையாக இயங்கக்கூடிய கல்வி நிலையம்—பல்கலைக் கழகம்—எதுவும் இல்லாமையேயாகும். பல்கலைக்கழகங்களிலே தமிழுக்குச் 'சரியாசனம்' தரமறுப்பது தமிழ்ப் பண்பாட்டின் உயர்வுக்கு பங்கம் விளைவிப்பதாகும்.

தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாத்துப் பரப்புதற்குரிய வழிவகைகள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். தமிழ்க் கல்விக்கு உதவியும் உற்சாகமும், உபகாரமும் வழங்குதல் வேண்டும். ஆக்கப் பண்பு வாய்ந்த எழுத்துக்களும் ஆராய்ச்சிகளும் அபரிமிதமான பாராட்டைப் பெறுதல்வேண்டும். தமிழ்ப் பண்பாட்டை விளக்கும் திரைப்படங்களும், நூல்நிலையங்களும், காட்சிச்சாலைகளும் அமைக்கப்படுதல் அவசியம். கலைக்களஞ்சியங்கள் பலவற்றை யாத்துப் பணியாற்ற வேண்டும். இப்போதுள்ள பாடப்புத்தகங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும். கருத்தை வெளியிடுவதற்கு மிகச்சிறந்த சாதனமாயுள்ள கவிதையிலே தமிழர் அதிக கவனம் செலுத்த வேண்டும். தமிழர் அறிவுலகுக்குச் செய்யும் தொண்டினை உலகறியச்செய்ய அவற்றை வேறு மொழிகளிலே பெயர்த்துத் தருதல்வேண்டும்.

பண்பாட்டைச் செயற்கையாக உருவாக்க முடியாது என்பது உண்மையே. எனினும் அது வளர்ந்து மலரும் வரையிலே தொண்டாற்றுதல் சாத்தியமானதேயாகும்.

அன்பர்களே ! 'பித்தர் சொன்னவும், பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப்படுபவோ !' என்று கம்பர் கூறியது எனக்கும் ஒருவகையில் பொருந்தும். ஏனெனில் எனக்குத் தமிழிலே பத்தி யுண்டு. தமிழ்ப் பித்தமும் சற்று உண்டு.

★

பார்லிமெண்ட் அங்கத்தினர்

★

மாரிஸ் எடிங்ஹாம்

★

ஒரு சில அதிக ஸ்தானங்களின் பலத்தால் சர்க்கார் அமைக்கும் நிலை ஏற்பட்டுள்ள இந்தக் காலத்தில் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் அதிகப் பொறுப்புடன், கடினமாக உழைக்கவேண்டியிருக்கிறது. சென்ற ஐந்து ஆண்டுகளில் அதிக உழைப்பினுல், பல அங்கத்தினர்கள் உடல் நலிவுற்ருர்கள். இப்போது, கணிசமான அதிக ஸ்தானங்களைப் பெற்ற கட்சி, சர்க்காரை அமைத்திருப்பதால், பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்கு சிறிது ஓய்வு கிடைக்கக்கூடும். ஆனுல் கடுமையாக உழைத்துப் பழகியவர்களுக்கு இதனுல் லாபமில்லை.

தம்முடைய கட்சியிலும் பார்லிமெண்டிலும் தினசரி அலுவல்களில் ஓர் அங்கத்தினர் எப்படிக் கலந்துகொள்கிருர் எனப் பார்ப்போம்.

திங்கள்கிழமை காலையில் தமது தொகுதியிலிருந்து அவர் வெஸ்ட்மினிஸ்டருக்குத் திரும்புகிருர். முதல்நாள் முழுவதும், அவர், தொகுதி வாக்காளர்களைச் சந்தித்ததில், ஓய்வு எடுத்துக் கொள்ளவில்லை. வெஸ்ட்மினிஸ்டருக்கு வந்ததும் முதல் வேலையாக, தபால்களைக் கவனிக்கிருர். பொதுவாக இந்தக் காலத்தில் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஏராளமான கடிதங்கள் வருகின்றன. பிற்பகல் 2-30 மணிக்கு அங்கத்தினர் காமன்ஸ் சபையில் ஆஜராகிருர். பிரார்த்தனை முடிந்ததும், கேள்வி நேரம் ஆரம்பமாகிறது. ஒருமணி நேரம் கேள்விகளுக்கு ஒதுக்கப்படும்; அன்றைய நிரலில், தம்முடைய கேள்வி இடம் பெருவிட்டால், அங்கத்தினர் சபையிலிருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனுல், சட்டசபை நிபுணர்களும், கட்சிப் பற்றுள்ளவர்களும் இந்த வாய்ப்பைத் தவறவிடுவதில்லை; சபையில் ஆஜராகியிருப்பார்கள். அப்பொழுதுதான் உத்சாகமாக அலுவல்களில் கலந்துகொள்ளவும் முடியும். விவாதத்தை ஊன்றிக் கவனித்து, உபகேள்விகளைப் போட்டு எதிராளிகளைத் திணரடிக்கச் செய்வார்கள். சர்க்கார்

கட்சியைச் சேர்ந்தவர்கள், சர்க்காருக்கு அனுசரணையாகயிருந்து எதிர்க்கட்சியை மடக்க முயலுவார்கள். எதிர்க் கட்சியை சேர்ந்தவர்கள், கட்சித் தலைவருக்குத் துணையாக நின்று கேள்விகளை 'அள்ளிவிட்டு' சர்க்காரை திணர அடிக்க' முயல்வார்கள், பொதுவாக, தமக்குப் பாண்டித்தியமுள்ள கேள்விகள் வரும் போதுதான், ஒருவர் அபார சாமர்த்தியங் காட்டுவார். மற்றத்துறைகளில் அவருக்கு நல்ல அனுபவம் இல்லையாகையால், சேர்ந்து நிர்ப்பார்.

கேள்விநேரம் முடிந்தபிறகு, வாக்கெடுக்கக்கூடிய விவாதம் நடக்கும். கட்சி பலத்திற்காக அங்கத்தினர்கள் சபையில்இருப்பது அவசியம். இதைப்பற்றி கட்சிக் கொறடா முன்னதாகவே தகவல் கொடுத்துவிடுவார். கட்சிக் கொறடாவின் ஆணையை மீற எவரும் துணிவதில்லை.

பொது விவாதத்தில் கலந்து கொள்ள ஓர் அங்கத்தினர் ஆவலாக இருக்கலாம். சபாநாயகருடைய கவனத்தை இழுத்த பிறகே அவர் பேசமுடியும். அதற்கும், கூப்பிடும் வரையில் அவர் காத்திருக்க வேண்டும். ஆரம்பப் பேச்சுக்கள் நீளமாக அமைந்துவிட்டால், பிறகு பேசுகிறவர்களுக்கு அதிக வாய்ப்பு இராது. விவாதத்தில் கலந்து கொள்ள விரும்பாத அங்கத்தினர் வெளியே வரலாம். அப்போதும், அவரைக்காண யாராவது காத்திருப்பார்கள்; அல்லது உடனே கவனிக்கவேண்டிய கடிதங்கள் இருக்கும். அல்லது ஏதாவது கமிட்டிக் கூட்டங்களில் கலந்துகொள்ள நேரிடும். எப்படியிருந்தாலும், கட்சிக் கொறடாவின் அழைப்புக்குத் தயாராக இருந்துகொண்டே, அவர் அலுவல்களைக் கவனிப்பார். சபையில் கட்சி பலத்தைக் காப்பதில், ஒவ்வொருவரும் தயாராக இருப்பார்கள். கட்சிக் கொறடாக்களைக் கலந்துகொள்ளாமல், எவருமே சபையிலிருந்து வெளியே தங்கமாட்டார்கள்.

பொதுவாக, இரவு பத்துமணி வாக்கில்தான் பொது விவாதம் முடியும். ஆனால் அத்துடன் அன்றைய அலுவல் முடிந்துவிடாது. ஒவ்வொரு செஷனிலும், (சபைப் பருவம்) ஒருசில தினங்களில் இரவு முழுவதும் சபைகூடி, அலுவல்களைக் கவனிப்பதுண்டு, அப்போது, பின்வரிசை அங்கத்தினர்கள், சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ளச் சென்றாலும், 'வாக்குமணி' ஓசை கேட்டதும் சபைக்கு ஓடிவந்துவிடுவார்கள். இரவு முழுவதும், சபை விவாதத்தில் கலந்துகொண்ட ஒரு சிலருக்கு, மறுநாள் காலை பத்து அல்லது பத்தரை மணிக்கு நடக்கும் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்ள நேரிடும். அப்போது, அவர்களுக்கு ஓய்வு ஏது?

ஒவ்வொரு செஷனிலும் தனிப்பட்டோர்கள் கொண்டுவரும் மசோதாக்களில் சில விவாதத்திற்கு வரும். சகஜமாக இந்த மசோதாக்களையும், தனிப்

பட்டவர்களின் தீர்மானங்களை யும் கவனிக்க ஒரு சில தினங்கள் ஒதுக்கப்படும். சபைக்கு வரும் மசோதாக்கள் எல்லாமே சட்டமாகிவிடுவதில்லை. இந்த அலுவல்களைக் கவனிக்க நல்ல அனுபவம் அவசியம்.

கட்சிக் கூட்டங்களிலும் கமிட்டிகளிலும் அங்கத்தினர்களுக்கு அலுவல்கள் இருந்துகொண்டே யிருக்கும். கமிட்டி அலுவல்கள் பலதரப்பட்டவை. காமன்வெல்த் கொள்கை, காலனி விவகாரம், விவசாயம், ஜாகைவசதி என்று கட்சிப்பற்றுள்ள கமிட்டிகள் இருக்கும். அவற்றில், தத்தமக்குப் பிடித்த விஷயங்களைக் கவனிக்க ஒருசிலர் முன்வருவார்கள். பொதுவாக கேள்வி நேரத்திற்குப் பிறகுதான் இந்தக் கமிட்டிகள் கூடி அலுவல்களைக் கவனிப்பது வழக்கம். கட்சிக் கொள்கைகளை உருவாக்குவதில் இவை சிறப்பாகப் பணியாற்றுகின்றன. இவற்றின் செல்வாக்கும் அதிகம். கட்சியின் கருத்துக்களை சம்பந்தப்பட்ட மந்திரிக்குத் தெரிவிக்கவும், அபிப்பிராயம் திரட்டவும் இவை சேவை செய்கின்றன. கமிட்டிகளின் சேவை ஒருபுறமிருக்க, கட்சிக்கொள்கைகளை உருவாக்கும் குழுக்களும் உள. கன்ஸர்வேடிவ் கட்சியின் 1922 கமிட்டியும் பார்லிமெண்டரி தொழிற் கட்சியும் பிரசித்தமானவை. இவை வாரத்தில் ஒருநாள், காலை நேரத்தில்கூடி, அலுவல்களைக் கவனிக்கும்.

காமன்ஸ் சபையில் அலுவல்களைக் கவனிக்கும் கமிட்டிகள் உள. அவற்றைப் பொதுவாக நிரந்தரக் கமிட்டிகள் எனக் குறிப்பிடலாம். இவற்றில் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள். ஒவ்வொரு பருவத்திலும், அங்கத்தினர்கள் நியமிக்கப்படுவார்கள். ஒவ்வோர் கமிட்டியும் காமன்ஸ்சபையின் சிறு உருவமாக, கட்சிகளுடைய பிரதிநிதிகளடங்கியதாக இருக்கும். சபை விதிகளுக்கு அடங்கி, இவை செயலாற்றும். பொதுவாக இந்தக் கமிட்டிகள் காலை நேரத்தில்கூடி அலுவல்களைக் கவனிக்கும். பொதுவாக இந்தக் கமிட்டிகள், சபையின் முதுகெலும்பு போன்றவை. இரண்டாம் வாசிப்பிற்குப் பிறகு, ஒவ்வொரு மசோதாவும் கமிட்டியின் பரிசீலனைக்கு வரும். ஒரு பருவத்தில்' ஐந்து அல்லது ஆறு கமிட்டிகள் பணியாற்றும்.

தனிப்பட்ட மசோதாக்களைக் கவனிக்க பொறுக்குக் கமிட்டிகள் நியமிப்பதுண்டு. இவற்றின் வேலைமுறை தனியாகும். இவைதவிர எஸ்டிமேட் கமிட்டி, பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டி, உரிமைக்கமிட்டி எனப் பலகமிட்டிகள் உள. இவற்றில் அங்கம் வகிப்பதே பெரிய கௌரவமாகும்.

பார்லிமெண்டரி தூது கோஷ்டிகளில் இடம்பெறுவதும் சிறப்பான சேவையாகும்; கௌரவமும்கூட.

●

சோதிடப் புரட்டு

★

சி. கெல்லி

அப்பாவிகளான ஆயிரக் கணக்கான மக்கள் மூடத் தனமாக, ஒரு பித்தலாட்டத்துக்காக, வருஷந்தோறும் லட்சக் கணக்கான பணத்தைச் செலவழித்து வருகிறார்கள். சோதிடம் என்பதுதான் இந்தப் பித்தலாட்டம். விஞ்ஞானம் வளர்ந்துள்ள இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட மூடத்தனத்துக்கு மக்கள் அடிமைப்பட்டிருப்பது நம்பமுடியாத சங்கதி. அறிவு வளர்ச்சி இல்லாத பூர்வகாலத்தில் மனிதனுடைய மனோநிலை குழந்தைப் பருவத்தில் இருந்துவந்தது. அப்போது; உலகம் தட்டையாக இருந்ததாகவே ஜனங்கள் நம்பினார்கள். அப்படிப்பட்ட இருண்ட காலத்திலிருந்து வந்த மூடநம்பிக்கைக்குச் செவி சாய்க்கக் கூடியவர்கள் இன்னும் இருந்து வரத்தான் செய்கிறார்கள் என்று நம்ப முடியுமா, என்ன? அப்படி இருந்தும், எதிர்காலத்தைப் பற்றிச் சரியாகப் பலன் கூறிவிடுவதாகச் சோதிடர்கள் வெட்கமில்லாமல் பாவனை செய்கிறார்கள். ஒருவனுடைய சீலத்தைப்பற்றி அளந்தறிந்து சொல்லி விடுவார்களாம்! இவையெல்லாம் சுத்த அபத்தங்கள் என்று கண்டு, இவற்றைப் பொருட்படுத்தக் கூடாதென்று தங்கள் புத்திக்குப்பட்டாலும், உலகமெங்கணும் உள்ள லட்சக்கணக்கான ஜனங்கள் எல்லாவிதமான வியாபார விஷயத்திலும், சொந்த விவகாரங்களிலும் சோதிடம் பார்த்து வரவே செல்கிறார்கள்.

இந்த முந்நூறு வருஷத்தில், நட்சத்திரங்களுக்கும் மனிதனுடைய வாழ்க்கைப் போக்குக்கும் லவலேசமும் தொடர்பு இருந்து வருகிறதென்று நம்புவதாக, விஞ்ஞானி என்று ஒப்புக்கொள்ளப்பட்ட எவனும் சொல்லவில்லை. உலகத்தின் எந்தப் பாகத்திலிருந்தும் எந்த விஞ்ஞானியும் இப்படிச் சொன்னதில்லை. சோதிடத்தின் மேல் விஞ்ஞானிகளுக்குள்ள ஒரே உணர்ச்சி அருவருப்பு உணர்ச்சிதான்.

சோதிடம் எப்படி வந்தது? ஆரம்பத்தில் பாபிலோனியர்களும், அஸிரியாவிலும் சில சோதிடர்களும் கிளம்பினார்கள்.

அவர்களைப் பின்பற்றி அரே பியா, எகிப்து, கிரீஸ், ரோம், ஆகிய இடங்களில் சிலர் கிளம் பினார்கள். இவர்கள் தங்கள் சிறு தெய்வங்களைக் கிரகங்க ளாக எண்ணி வந்தார்கள். கிரகங்களுக்குத் தங்கள் கடவுள் களின் பெயர்களை இட்டிருந்தார் கள். அந்த அந்தக் கடவுளின் பெயரைக் கொண்ட கிரகத்துக்கு அந்த அந்தக் கடவுளின் சக்தி இருந்து வந்ததென்று நம்பினார் கள். இன்று நிலைமை என்ன? முழு மூடனான ஒரு சோதிடன் கூட ஜூபிடர், வீனஸ், மார்ஸ் ஆகிய கடவுளர் நிஜமாகவே இருந்து வந்தனர் என்று நம்ப மாட்டான். இவை புராணிகக் கதைகள் என்றேசொல்லுவான். அப்படி யிருந்துங்கூட, பிரம் மாண்டமான பாறைத் துண்டு களும், வாயுப் படலங்களும்— நம்மைவிட்டு லட்ச லட்சம் மைல் களுக்கு அப்பால் வான வெளி யில் மிதந்து கொண்டிருந்த போதிலும், எப்படியோ நம் மீது ஆதிக்கம் செலுத்தி வருகின் றன என்பதை நாம் நம்பத் தான்வேண்டும் என்கிறார்கள். ஏன்? மோகினிக் கதைகளில் வரும் பாத்திரங்களின் பெயர் களை இவை கொண்டிருக்கின்ற னவாம்; காரணம் எப்படி?

சோதிட அபத்தத்தை நிரூபிப் பதற்கு விஞ்ஞான ரீதியில் உள்ள மிக முக்கியமான அத் தாட்சி என்ன என்று கேட்ப தற்கு, பிரின்ஸ்டென் கல்லூரி யின் வானசாஸ்திர இலாகா வைச் சேர்ந்த பேராசிரியர் ஜான் க்யூஸ்டுவர்ட் என்ன சொன்னார்?

"விஞ்ஞான ரீதியில் இதற்கு விடை தருவது கடினம். ஏனென்றால், சாஸ்திரீக முறை யில் அமைந்த அத்தாட்சி எதை யும் சோதிடங்கள் கொண் டிருக்கவில்லை. ஆகவே, பரீட்சை செய்ய அங்கு இடமில்லை. குறிப் பிட்ட கிரகங்கள் நம்முடைய சீலத்தை நிர்ணயிக்கின்றன வாம். நாம் பிறக்கிறபோது கிர கங்கள் இருந்த நிலை காரண மாக, நம்முடைய ஜாதகம் குறிப் பிட்ட கிரகங்களைக் கொண்டு அமைகிறதாம். இது, சோதிடர் களின் வாதம். ஆனால், ஆயிரம் பேர் தினசரி, ஒரே நேரத்தில் பிறக்கிறார்கள். அப்படி இருந் தும், எந்த இரண்டு பேரும் ஒரே மாதிரியான சீலம் கொண் டிருப்பதில்லை; ஒரே மாதிரியான சீலம் கொண்டிருப்பதில்லை; ஒரே மாதிரியான திறமை கொண்டிருப்பதில்லை; வாழ்க் கையில் ஒரே மாதிரியான வெற் றியை அடைவதில்லை.

"இரட்டைக் குழந்தைகள் கூட, பின்னால் வெவ்வேறு மாதிரி ஆகிவிடுகிறார்கள். வான வெளியில் உள்ள கோளங்கள் நம்மை ஆட்டி வைப்பதாகவே வைத்துக்கொண்டாலும் ஒரு வன் பிறக்கும்போது கிரகங்கள் இருக்கும் அமைப்பு நிலையைப் பற்றி இவ்வளவு தூரம் அழுத் திச் சொல்ல வேண்டிய தேவை என்ன? பிறக்கும் நேரத்தை விட்டுவிட்டு, கருத் தரிக்கும் நேரத்தை எடுத்துக்கொண்டால்

என்ன? நாம் பிறக்கிற நேரம் தான் முக்கியமென்று நம்பினால், பிறக்கப்போகும் குழந்தையின் எதிர்காலம் பூராவையுமே மாற்றி விடும் சக்தி வைத்தியனுக்கு இருக்கிறதென்பதையும் நாம் நம்பித்தானாக வேண்டும். ஏன்? தாயின் நலத்தைக் கருதி, பேறு காலத்துக்கு முந்தியே குழந்தை பிறக்கும்படி வைத்தியனால் செய்ய முடியுமல்லவா?"

தாங்கள் பிறந்த நேரத்தை ஒரு சிலர்தான் பிசகாமல் குறித்து வைத்திருக்கிறார்கள். சோதிடப்பலன் தப்பிப்போனால், பிறந்த நேரம் சரியாகக் கொடுக்கவில்லை என்ற சாக்குச் சொல்லிச் சோதிடர்கள் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். ஒரு சோதிடர் ஒரு சமயம், 'ஏல்'கல்லூரியின் வானச் சோதனைக் கூடத்துத் தலைவரான பேராசிரியர் பிரான்க் ஸ்க்வே ஸிங்கருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் பேராசிரியருக்குத் தெரிந்த யாராவது ஒருவனுடைய பிறந்தநாள், மணி, நிமிஷம் இவைகளைக் குறித்து அனுப்பினால், பரிட்சை பார்ப்பதற்காகத் திட்டமான பலன் எழுதி அனுப்புவதாகச் சொல்லியிருந்தார். ஸ்க்வே ஸிங்கருக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அவருடைய மகன் பிறந்த நேரம் அவருக்கு மிக நன்றாகத் தெரியும். தாயின் வயிற்றிலிருந்து நிலத்தில் விழுந்து, குழந்தை முதன்முறையாக வாய் திறந்து குரல் கொடுத்த நேரம், ஒரு விநாடி வித்தியாசம்கூட இல்லாமல், அவருக்குத் தெரியும். இந்த பேராசிரியர் என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள்:

"சோதிடர்கள் எப்படி மணிக் கணக்குப் பண்ணுகிறார்கள் என்றெனக்குத் தெரியாது. நடப்பு மணியா, பகல் நேரத்தை மிச்சப் படுத்தும் மணியா? எதுவாக இருந்தாலும், பல தினுசான மணிகளுக்கும் ஒத்து வரும்படி, நியூயார்க்கிலிருந்து பீக்கிங் நகர் வரை உள்ள பற்பல இடங்களில் வழங்கும் மணிக் கணக்குகள் அனைத்துக்கும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுவதற்காகப் பற்பல விதமான மணி நேரங்களையும் இந்த ஆசாமிக்கு நான் கொடுத்திருந்தேன். ஒரு குறிப்பிட்ட மணியில் ஒருவன் ஓரிடத்தில் பிறப்பதற்குப் பதிலாக மற்றோர் இடத்தில் பிறந்திருந்தால், கிரக அமைப்பு நிலையில் இயற்கையாகப் பெரிய வித்தியாசம் இருக்கவே செய்யும். என் மகனுடைய வாழ்க்கையைப் பற்றி அந்தச் சோதிடர் சொன்னவற்றில் ஒன்றுகூட உண்மையாகவில்லை."

சோதிடத்திலுள்ள எமகாதகப் புரட்டுகளை அப்படியே மதிமயங்கி நம்பி விடுகின்றவர்களுக்கு வான சாஸ்திரச் சரித்திரத்தில் உள்ள இரண்டே இரண்டு நிகழ்ச்சிகள் விஷயத்தை விளக்கிவிடும். கிரகங்களின் ஆட்சிமுறையைச் சோதிடர்கள் நேர்த்தியாய்த் துறை பிரித்து முடிந்தவுடனே, யுரேனஸ் கிரகத்தை ஹெர்செல்

என்ற வான சாஸ்திரி கண்டு பிடித்தார். பிறகு 1846ல் நெப்டியூன் கிரகம் கண்டு பிடிக்கப் பட்டது. பாவம், பல நூற்றுண்டுகளாக யுரேனஸும், நெப்டியூனும் காலாடித்தனமாய்க் கண்டபடி சுற்றிக்கொண்டே யிருக்கின்றன. மனிதர்களுடைய காரியங்களை நடத்தி வைப்பதில் இவை சிரத்தை காட்டவே இல்லை. ஆனாலும், இந்த இரண்டு கிரகங்களும் அற்ப சொற்பமானவையா? மெர்க்குரி, மார்ஸ், வீனஸ், மூன்றும் சேர்ந்தால்கூட இவை ஒவ்வொன்றையும் விடச் சிறிய வையே. கடைசியில், இவற்றால் சோதிடர்களுக்குச் சௌகரிய மான பிழைக்கும் வழிதான் கிடைத்துவிட்டது. காலம் சென்ற இவான் ஜெலின் ஆடம்ஸ் பிரபலமான புத்தகங்கள் எழுதியவர். சோதிடத்தின் மூலம் வருவாய் தேடிப் பிரசித்தம் அடைந்தவர். அவர் எழுதிய புத்தகம் ஒன்றில், யுரேனஸ் கிரகம் ரெயில் பாதைகள்மீதும், நெப்டியூன் கிரகம் வானவீதி மீதும் ஆதிக்கம் செலுத்துகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார். விஷயங்களின் உண்மையைத் தெரிந்துகொள்வதில் சாஸ்திரீக மான முறைக்கும், இப்படித் திடுதிப்பென்று சட்டம்போட்டு வாய் அடைக்கும் முறைக்கும் உள்ள வித்தியாசத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். இது இப்படித்தான் என்று விஞ்ஞான சாஸ்திரம் ஒப்புக்கொள்வதே யில்லை. நிரூபித்துக் காட்டமுடியாத எதையும் அது அங்கீகரிப்பதில்லை. யுரேனஸ் கிரகத்தை வில்லியம் ஹெர்ஸ்சல் கண்டு பிடித்தபோது, அவர் அதை எப்படிக் கண்டு பிடித்தார் என்று திட்டமாகக் காட்டினார். இதற்கு முன்பே அதை வேறு யாரும் ஏன் கண்டு பிடிக்கவில்லை என்பதற்கும் நியாயமான விளக்கம் தந்திருந்தார். வானவூர்திகளின்மேல் நெப்டியூன் கிரகத்துக்கு உள்ள ஆட்சி பலத்தைப்பற்றி ஸ்ரீமதி ஆடம்ஸ் எடுத்துக்காட்ட முயன்றிருந்தால், அது சல்லிசாக முடிகிற காரியமா என்று யோசித்துப் பாருங்கள்!

பத்திரிகைப் பத்திகளிலும், புத்தகங்களிலும் வெளியாகிற சோதிடப் பலன் உளறல்களிலும் பெரும்பாலானவை வெறும் உபயோகமற்ற க்ஷேமலாப வியாபாரங்கள்தான். இவற்றை நிஜம் என்று நம்பி விடுபவர்களின் மன நிலையைப்பற்றி நினைத்தாலே நமக்கு நடுக்கம் ஏற்படுகிறது: "உறவினர்களோடு இன்னும் சுமுகமான சம்பந்தத்தை உண்டுபண்ணிக் கொள்ளுவதற்கு இன்று நல்ல நாள்" அல்லது "உங்களுடைய எதிர்கால வியாபார மாறுதல்களைப் பற்றித் திட்டம் போடுவதற்கு உங்களுடைய கடந்தகால அனுபவம் உதவுமாக."

பலன் எப்படி? பழைய அனுபவம் புது முயற்சிக்கு உதவாமல் வேறு என்ன செய்யும்? இதிலே சந்தேகம் கூடவோ? ஒருநாளைவிட மற்றொருநாள் எப்படிச் சிறந்ததாகிறது? நட்

சத்திரங்களைப் பார்த்துத்தான் இப்படிப்பட்ட அபார ஞானம் வந்ததாக ஏன் சொல்லவேண்டும்? மாமூல் பாணியிலுள்ள சோதிடப் பத்திரிகையொன்று அதிலே ஒரு கட்டுரை. அங்கே ரத்தினச் சுருக்கமான அறிவுரைகள் தரப்பெற்றிருக்கும்: "அக்டோபர் 24 முதல் நவம்பர் 23 வரை உள்ள காலத்தில் பிறந்தவர்களுக்குப் பலன்" என்ற தலைப்பின்கீழ் இந்தமாதிரி கண்டிருக்கிறது:

"ஏழாம் மடத்தில் யுரேனஸ், அங்கிருந்துகொண்டு உங்களுடைய வாழ்க்கைக்கு அடிப்படையான சக்திக் கதிர்களைப் பரப்புகிறது. மற்றவர்களோடு நீங்கள் பழகுவதால் உங்கள் வாழ்க்கையில் உண்டாகிற மன எழுச்சியை அது கிளம்பச் செய்கிறது" இந்தமாதிரி, மாவிலும் படாமல், பணியாரத்திலும் படாமல், முடிவே இல்லாமல், தங்களிடம் மாட்டிக்கொண்ட பிராணிகளைச் சோதிடர்கள் மிரட்டிவிடுகிறார்கள்.

பேராசிரியர் ஸ்க்வேஸிங்கர் பல வருஷம் பத்திரிகைகளில் சோதிடப் பகுதியில் எழுதிவந்திருக்கிறார். உண்மையைக் கண்டுபிடித்து மக்களுக்கு அறிவூட்டுவதற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்துவிட்டதாகச் சொல்லிக்கொண்டு சோதிடர்களும் சோதிடப் பலன்போடும் பத்திரிகைகளும் வேண்டுமென்றே ஏன் மூட நம்பிக்கையைப் பரப்பிவருகின்றன என்று அவர் வினயமாக கேட்டுக்கொண்டே வந்திருக்கிறார், இதற்குச் சர்வசாதாரணமாகச் சொல்லும் சமாதானம் என்ன தெரியுமா? "தினசரிப் பலன்கள்" அறிவில்லாத மக்களுக்குப் பொழுது போக்கு ஆகுமாம். இதற்காக அவர்கள் பத்திரிகையை வாங்குவார்களாம்; இதனால் கெடுதல் ஒன்றும் இல்லையாம்!

கெடுதல் இல்லையா என்னக்? நிறையக் கெடுதல் உண்டு ஒழியவேண்டிய ஒரு மூடப் பழக்கத்தைப் பத்திரிகைகளில் வரும் இந்தத் தினசரிப் பலன்கள். சாகாமல் காத்துவருகின்றன. பாஷாண்டிப்பேர்வழிகள் இதன் மூலம் பொய் புரட்டுகள் சொல்லிப் பணம் சேர்க்க முடிகிறது. அதுமட்டுமா? நிலைமை இன்னும் படுமோசமாகிறது. 'சயன்ஸ் சர்வீஸ்' ஆசிரியரான வாட்ஸன் டேவிஸ் சொல்லுவதுபோல, பொய்யிலிருந்து உண்மையைப் பிரித்து அறியத் தங்களுக்குள்ள இயல்பான ஆசையையும் இயற்கையான பொது அறிவையும் வாசகர்கள் இழந்துவிடும்படி செய்கிற ஆபத்து இதில் இருக்கிறது. சாஸ்திரீக முறையில் இல்லாமல், மட்டரகமாய்ச் சிந்திக்கிற விஷயங்களைச் சும்மா கொட்டிக்கொண்டேயிருந்தால், உண்மையை அறிய விரும்பும் வாசகர்களுடைய மனப்போக்கு மந்தமாகிவிடும்."

சோதிடத்தைப் பற்றிய உண்மைகளை எவ்வளவு வேண்டு

மாஞலும், பரப்பிப் பாருங்கள். சில ஜனங்கள் சோதிடத்தை எப்போதும் நம்பத்தான் செய் வார்கள். ஏன்? மன வைத்தி யர்கள் சொல்லுகிறபடி அவர்க ளுடைய குறை நரம்புத் தளர்ச் யால் ஏற்பட்ட இருக்கை கொள்ளா நிலேயேதவிர, வெறும் அறியாமை மட்டுமல்ல. "மகாத் மியக் கானல் நீர்" என்பார் களே, அந்தச் சங்கதி. வாழ்க் கையில் தோல்விமேல் தோல்வி கண்டுகொண்டே வரும் ஒரு வன் தன்னேப்பற்றி மிகப்பெரு மையாக எண்ணிக்கொண்டிருப் பான். அதனுல், அவனுடைய விதியை நிர்ணயிப்பதற்கும் கிர கங்கள் கூடச்சேர்ந்து பாடுபடு கின்றனவாம்! இப்படி ஓர் அசட் டுத்தனம்.

சில பேர் தங்களுடைய எதிர் காலத்தைப் பற்றி விசாரித்துக் கொண்டாலே எதிர்காலத்துக்கு வேண்டிய அனேத்தையும் செய்துவிட்டதாக நம்பிவிடுகிருர் கள். ஆக்கவேலே செய்வதை விடச் சோதிடனேத் தேடிப் போவது சுலபம்தான். ஏமாற வேண்டும் என்று விரும்புபவர் களுக்கு அறிவு உதவிபடி யாகாது. மற்றவர்கள் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். விஞ்ஞான உண்மை ஒவ்வொன்றையும் நிரூபித்துக் காட்டமுடியும். பூமியிலிருந்து சூரியன் இவ்வளவு தொலேவில் இருக்கிறதென்று ஒரு வான சாஸ்திரி சொன்ஞல், அவன் அதை எப்படிக் கணக்கிடுகிருன் என்பதை உங்களுக்கு அவன் திட்டமாக எடுத்துக் காட்ட முடியும். ஆனல் சோதிடத்தை நிரூபிக்க எந்த அத்தாட்சியை யும் எடுத்துக் காட்டமுடியாது.★

★

ஏறு, ஏறு, மேலே ஏறு!

தம்பி, நான் ஏது செய்வேனடா! தமிழைவிட மற் ருெரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தமிழனேவிட மற்ருெரு ஜாதியான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு சம்மதமில்லே. தமிழச்சியைக்காட்டிலும் மற் ருெரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது தம்பி—உள்ளமே உலகம்.

ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே, மேலே! நிற்கும் நிலேயிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத் துக்கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களேக் கண்டு குடல் குலுங்கச் சிரி.

உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ. பற! பற! மேலே, மேலே, மேலே.

சிறுகதை

ஸ்வர்ண குமாரி

மகாகவி பாரதியார்

●

பெங்காளம் என்று கூறப்படும் வங்கதேசத்திலே, சாந்த்பூர் (சாந்திபுரம்) என்ற கிராமத்தில் மனேரஞ்சன பானர்ஜி என்று ஒரு பிராமண வாலிபன் உண்டு. இவன் கல்கத்தா போய் பி. ஏ. பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கையில், 1904-ம் வருஷம் டிசம்பர் மாதம் ரஜாவின் பொருட்டாகத் தனது சொந்த ஊராகிய சாந்த்பூருக்கு வந்திருந்தான்.

மனேரஞ்சன் வெகு சுந்தரமான ரூபமுடையவன். பார்ப்பதற்கு மன்மதனைப் போலிருப்பான். மேலும் குழந்தைப் பிராயம் முதலாகவே பள்ளிக்கூடத்துப் பந்தாட்டம் முதலிய விளையாட்டுக்களிலேயும், மற்றும் சிலம்பம் கர்லா முதலிய சுதேசீய தேகாப்பியாசங்களிலேயும் இவன் மிகுந்த தேர்ச்சி உடையவனாகி, தன்னேடு ஒத்த வாலிபர்கள் எல்லோராலும் 'அர்ஜுனன்' என்று அழைக்கப்பட்டு வந்தான்.

வயது இருபத்தி மூன்று ஆயிருந்த போதிலும், என்ன காரணத்தாலோ இன்னும் விவாகம் நடக்காமல் இருந்தது. வங்காளத்தார் மிகுந்த சொற்ப வயதிலேயே விவாகங்கள் நடத்தி வருவது முறைமை இவன் விஷயத்தில் மட்டும் இவ்வாறு நடக்கவில்லை. இதற்கு வேறு ஒரு உள் முகாந்திரமும் உண்டு. மனேரஞ்சனுடைய தந்தை உயிரோடிருந்திருக்கும் பட்சத்தில், இவனை இதற்கு முன் விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தி யிருப்பார். ஆனால், இவனுக்கு ஏழு வயதாக இருக்கும் பொழுதே, தந்தை இறந்து போய் விட்டார். தாய்க்கு இவன் ஒரே பிள்ளையாதலால், இவன் மீது மிகுந்த அருமை கொண்ட

வளாகி வீட்டில் இவன் சொன்னதற்கு மாறு சொல்லாமல் காரியங்கள் நடந்து வந்தன. இந்தக் குடும்பத்திற்கு அதிக ஆஸ்தி இல்லாவிட்டாலும் 'உள்ள நிலத்தை விற்று, பணம் எடுத்துக் கொண்டு தான் கல்கத்தாவுக்குப் போய் பரீட்சைகள் தேறி வரவேண்டும்' என்று இவன் சொன்னவுடனேயே, யாதொரு ஆட்சேபமும் சொல்லாமல், 'சரி' என்று சம்மதித்து விட்டாள். இது போலவே தான் எல்லா விஷயங்களிலும்.

அடிக்கடி இவனுடைய தாய், இவனைக் கூப்பிட்டு "குழந்தாய், ரஞ்சன்! உனக்கு வயதாய் விட்டதே, விவாகம் எப்போடா செய்து கொள்வாய்?" என்று கேட்டால், இவன் முரட்டுத்தனமாக, "அம்மா, அந்தப் பேச்சைமட்டிலும் என்னிடம் பேசாதே" என்று சொல்லி விட்டு, வெளியே போய் விடுவான்.

அந்தரங்கத்திலே இவன் வடக்கு வீதி ஸூர்யகாந்த பாபு என்ற பெருஞ்செல்வரின் குமாரத்தியான ஸ்வர்ண குமாரியின் மீது மோகம் வைத்திருக்கிருனென்ற விஷயத்தை தாயார் நன்ருக அறிவாள். ஆனல், இவனுக்கும் ஸ்வர்ண குமாரிக்கும் ஒருபோதும் விவாகம் நடப்பது சாத்தியமில்லை என்பது அவளுக்கு நிச்சயந்தான். அப்படி ஒரு வேளை அந்த விவாகம் நடப்பது சாத்தியமாகக் கூடுமானல், அதை இவள் கேட்ட மாத்திரத்திலே இவளுக்குப் பிராணன் போய் விடும். தனது மகன், ஸூர்யகாந்த பாபுவின் பெண்ணை விவாகம் செய்து கொள்வதைக் காட்டிலும் அப்பிள்ளை இறந்து போவது விசேஷமென்று அவளுக்குத் தோன்றும். தனது குல தெய்வமான ஸ்ரீகிருஷ்ண பகவானைத் தியானித்து இவள், "ஸர்வ ஜீவ தயாபரா! எனது பிள்ளைக்கு அந்த மிலேச்சனுடைய பெண்மீது இருக்கும் மோகத்தை நீக்கி அவனுக்கு நல்ல புத்தி கொடுக்கலாகாதா?" என்று அடிக்கடி கண்ணீர் சொரிந்து பிரார்த்தனை புரிவாள்.

ஸ்வர்ண குமாரியை மனேரஞ்சன் மணம் புரிந்துகொள்வதிலே, மனேரஞ்சனுடைய தாயாருக்கு இத்தனை விரோதம் ஏன் இருக்க வேண்டுமென்பதை நமது கதாப்பிரியர்கள் அறிய ஆவலுறலாம். அதன் காரணம் பின்வருமாறு: ஸ்வர்ண குமாரியின் தந்தையாகிய ஸூர்யகாந்த பாபு பிராமண குலத்திலே பிறந்த போதிலும், பிராமண ஆசாரங்களையும் அனுஷ்டானங்களையும் மார்க்க முறைகளையும் நம்பிக்கைகளையும் திலதர்ப்பணம் செய்துவிட்டு, 'பிரம்ம சமாஜம்' என்ற புதிய மார்க்கத்தைச் சேர்ந்து கொண்டுவிட்டார். இந்த ஸமாஜத்தார் "ஜாதி பேதம் இல்லை; விக்ரஹாராதனை கூடாது, பெண்களும் ஆண்களும் சமானமாக

ஒத்துப்பழகலாம்" என்பது போன்ற நவீனக் கோட்பாடு களைக் கொண்டிருப்பார். ஸ்வர்ண குமாரியின் தகப்பனுர் எந்தஜாதிக்காரனுடனும்கலந்து சாப்பிடுவார். அவர்கள் வீட்டு ஸ்திரீகள் பகிரங்கமாக வெளியே உலாவுவதும், கண்ட புருஷர் களுடன் சம்பாஷிப்பதும் பிழை யில்லை யென்று நடப்பவர்கள். ஸ்வர்ண குமாரிக்கு வயது பதி னெட்டாகியும் இன்னும் விவாக மாகவில்லை. இது எல்லாம், மிகுந்த புராதன இயற்கை கொண்ட மனேரஞ்சனின் தாயா ருக்குக் காதால் கேட்கக்கூட வெறுப்பாக இருந்தது. இங்ஙன மிருக்க, ஸ்வர்ணகுமாரியின்மீது தனது மகன் அடங்காத மையல் கொண்டிருக்கிருனென்பதை யும், அதன் பொருட்டாகவே வேறு விவாகத்தில் விருப்பமில் லாதிருக்கிருனென்பதையும் இந்த அம்மை பல முகாந்திரங் கள் மூலமாக ஊஹித்தறிந்து கொண்ட நாள் முதலாக, இவள் மனதிலே தோன்றிய வருத்தங் களுக்கு அளவு கிடையாது.

இங்கே ஸ்வர்ணகுமாரியின் நிலை எப்படி இருக்கிறதென்ப தைக் கவனிப்போம். இவள் மனதிலே மனேரஞ்சனுடைய வடிவம் என்றும் அகலாத சுந்தர விக்ரகமாகப் பதிந்து போய்விட் டது. வரம்பில்லாத செல்வ முடைய குடும்பத்திலே பிறந்து, ஸங்கீதம் ஸாஹித்யம் முதலிய கலைகளிலேயெல்லாம் சிறத்த பழக்கங்கள் கொண்டவளாகி தனக்கு இசைவான கணவனைத் தவிர மற்றபடி சாதாரண மனி தன் எவனையும் மணம் செய்து கொள்ளக்கூடாதென்று இவள் ஒரே பிடிவாதமாக இருந்தாள். இவளுடைய ரூபலாவண்யமோ சொல்லுந்தரமன்று, கருமை நிறங்கொண்ட அமிருதத்தின் கடல்களென்று சொல்லத்தக்க இவளுடைய நேத்திரங்களும், முல்லை போன்ற புன் சிரிப்பும், மூக்கும், கன்னமும், நெற்றியும், ஸ்வர்ணமயமான சரீரமும்— இவளை என்னவென்று சொல் வோம்! சுகப்பிரம்ம ரிஷி பார்த்தபோதிலும் மயங்கிப் போய் விடுவார். இவளுக்கு மனேரஞ்சன் பாலிய சிநேகி தன், பள்ளித் தோழன். தேவ ரூபனுன இவனையே கடைசி வரை வாழ்க்கைத் தோழனுகக் கொள்ளவேண்டுமென்று இவள் ஆசை கொண்டு விட்டாள். இதற்குமுன் எத்தனையோமுறை இவர்கள் அடிக்கடி சந்திப்பதும், அதன் சுவையிற் கனிந்து நிற் பதுவும், உயிரென நோக்கி உள் ளம் வாடுவதும், பொருளிலாத் தெய்விக மொழி பல புகல்வதும் என இவ்வாறு தமது மோஹ நெருப்புக்கு நெய் ஊற்றிக் கொண்டே வந்திருக்கிருர்கள். இப்போது மனேரஞ்சன் மறு படியும் சாந்த்பூருக்கு வந்த வுடனே, வழக்கம் போலவே இவர்களுடைய சந்திப்புகள் தொடங்கிவிட்டன. இதை நமது ஸ்வர்ணத்தின் தந்தை யாகிய ஸூர்யகாந்தபாபு அறிந்து ஒரு நாள் இவளை அழைத்து,

"மகளே! நீ நான் சொன்னபடி ஹேமசந்திர பாபுவை விவாகம் செய்துகொள்ளச் சம்மதிக்காமலிருப்பாயானால், இனி என் வீட்டைவிட்டு வெளியேற வேண்டும். கையில் காசற்றவனும், விக்கிரகாராதனை செய்யும் மூடபக்திக் கூட்டத்தைச் சேர்ந்தவனுமாகிய அந்த மனோரஞ்சன் பயலை நீ அடிக்கடி பார்த்துப் பேசுகிறாயென்ற வார்த்தை என் காதிலே படக்கூடாது. அடுத்த தை மாதம் உனக்கும் ஹேமசந்திர பாபுவுக்கும் விவாகம். நீ இப்போதே எனக்கு 'ஆகட்டு' மென்ற வார்த்தை கொடுத்துத்தீரவேண்டும். நான் எத்தனையோ வருஷம் உன்னுடைய மூடத்தன்மையான பிடிவாதத்தைச் சகித்தாகிவிட்டது. இனி ஒரு க்ஷணமும் பொறுக்க மாட்டேன். இன்றுமாலை இங்கே ஹேம சந்திரர் வருவார். நீ தோட்டத்திலேயுள்ள பூஞ்சோலையில் 6 மணிக்குப் போயிரு; அங்கே அவரை வரச் சொல்கிறேன். நீ அப்போது அவரிடம் உன்னுடைய சம்மதம் தெரிவித்தே தீரவேண்டும். இல்லாவிட்டால், உன்னைக் கையும் கப்பரையுமாய் நாளை காலையில் வெளியே ஓட்டி விடுவேன்,"—என்று மஹா கோபத்துடன், படபடவென்று சொல்லிவிட்டு, போய்விட்டார். தனது மகள் கண்ணீர் மாரிக்கிடையே தரை மீது, சோர்ந்து விழுந்து விட்டதைக்கூட அவர் கவனிக்கவில்லை.

பகல் முழுவதும் ஸ்வர்ணகுமாரி தனது தந்தையின் கொடுரத்தை நினைத்து நினைத்து மனம் தயங்கிக்கொண்டிருந்தாள். இவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. இதுபோன்ற சமயங்களிலே தாய் இருக்கும் பட்சத்திலே, எவ்வளவோ தைரியம் சொல்லுவாள். ஆனால், நமது ஸ்வர்ணத்திற்கோ தாயார் அதிபாலியத்திலே இறந்து போய்விட்டாள். வீட்டிலுள்ள ஸ்திரீகளெல்லாம் தூர பந்துக்களே யல்லாமல், இவள் தன் மனதையெல்லாம் சொல்லி முறையிடக்கூடியவாறு அத்தனை நெருங்கிய நட்புடையோர் யாரும் கிடையாது. தனியே நெடுநேரம் யோசித்து யோசித்து, இவள் பின்வருமாறு நிச்சயம் செய்துகொண்டாள்:

"தந்தையோ இரும்பு நெஞ்சுடையவர். மனோரஞ்சனோ தனது தாயிருக்கும் வரையில் பிரம்மசமாஜத்தில் சேரப்போவது கிடையாது. எனக்கு இந்த ஹேமசந்திரனை விவாகம்செய்து கொள்ளவேண்டுமென்ற விதியிருக்கிறது போலும். மனோரஞ்சனுடனே தான் வாழ்வேன் என்று நான் தெய்வ சாட்சியாய் விரதங் கொண்டாய்விட்டது. மனோரஞ்சன் என்னை விவாகம் செய்துகொள்வதும் சாத்தியமில்லை. இனி தந்தை வீட்டிலிருந்து பிச்சைக்காரி போல வெளியே துரத்துண்டு, ஏன் அவமானமடைய வேண்டும்? ஹேமசந்திரனையே விவாகம் செய்துகொள்வதாக இன்று

மாலை சம்மதமளித்து விட்டு, விவாகத்திற்கென்று குறிப்பிட்டிருக்கும் நாளில் விஷத்தைத் தின்று உயிரை மடித்துக்கொள்வோம். இல்லாவிட்டால் மரணமே கதி" என இவ்வாறு மனவுறுதி செய்துகொண்டு விட்டாள்.

இந்த ஹேமசந்திரன் யார்? இவன் ஒரு பணக்கார ஜமீன்தார். பிரமசமாஜத்தைச் சேர்ந்தவன். ஆனால், புராதன ஆசாரங்களைக் கைவிட்ட இவன் மற்ற பிரமசமாஜிகளைப்போல அத்துடன் நிறுத்திவிடாமல், மதுபானம், கோமாமிச போஜனம் முதலிய புது ஆசாரங்களும் புரியப் படித்துக்கொண்டு விட்டான். பார்ப்பதற்கு எருமை போலக்கொழுத்து, வெகு குரூபியாக இருப்பவன். மஹா மூடன். குரூர சிந்தையுடையவன். இவனிடம் ஸ்வர்ண குமாரியின் தந்தை, செல்வம்பற்றி விருப்புக் கொண்ட போதிலும், நமது ஸ்வர்ணத்தின் கோமள நெஞ்சு காதலுறுதல் எங்ஙனம் இயலும்? நிற்க.

மாலை மணி ஆயிற்று. பெரிய வனம்போல விஸ்தாரமுடைய சோலையினிடையே ஓர் அழகிய கொடி வீட்டின்கண் ஸ்வர்ண குமாரி தனியே உட்கார்ந்திருந்தாள். ஹேமசந்திரன் வந்து சேர்ந்தான்.

"பெண்ணே! இப்ப, உன் மனது எப்படி இருக்கிறது?"

"சரிதான்! சிறிது நாற்காலியைச் சற்றே விலகிப் போட்டுக்கொண்டு பேசவேண்டும்."

"அடடா! இந்த குணம் இன்னும் மாறவில்லை போலிருக்கிறதே! ஸூர்ய பாபு, 'நீ சரிப்பட்டு வந்துவிட்டாய்' என்று சொன்னாரே."

"ஆமாம்! அவருடைய கட்டாயத்தின்பேரில் சரிப்பட்டுவிட்டேன்."

"ஆனால், என்னை விவாகம் செய்துகொள்வதில் உன் மனதிற்குத் திருப்தி கிடையாதோ?"

"கிடையாது."

"அது எப்படியேனும் போகட்டும். உன் தகப்பனார் பலவந்தத்தின்பேரிலாவது நீ என்னை விவாகம் செய்துகொள்ளப் போவது நிச்சயந்தானே."

'ஆம்"

"சபாஷ்! ஸ்வர்ண, மெத்த சந்தோஷம். நீ இனி என் மனைவிதானே! அடடா! என்ன ஸௌந்தரியம்! என்ன ஸௌந்தரியம்! உன்னைப் பெறுவதற்குப் பட்டபாடெல்லாம் தகும், தகும். கண்ணே ஒரு முத்தம் தரமாட்டாயா?

"நாற்காலியை விலகப் போட்டுக்கொள்ளும்.';

"நீ எனக்கு மனைவியென்பதோ நிச்சயமாகிவிட்டது. மூடபக்தியுள்ள ஹிந்துக்களைப் போல் நாம் விவாகச் சடங்குகளுக்குக் காத்திருப்பது அவசியம் இல்லையல்லவா? விவாக பலனை இப்போதே ஏன் அனுபவித்துக்கொள்ளக் கூடாது? இனி உனது திவ்ய சரீரம் என்னுடையதுதானே?"

"விவாகதினத்திலேயே நான்

இறந்துபோய்விட்டால் எனது சரீரம் உமதாகமாட்டாதல்லவா?"

"அப்படியா யோசிக்கிருய்? ஆனல் விவாகப் பயனை இப்பொழுதே நுகர்ந்தறிகின்றேன்" என்று சொல்லி ஹேமசந்திரன் பலவந்தமாகத் தழுவ கையெடுத்தான்.

ஸ்வர்ணகுமாரி "கோ, கோ" என்றலறத் தொடங்கிவிட்டாள். திடீரென்று கொடிமாடத்திற்குப் பின்னே புதரில் பதுங்கிநின்ற மனோரஞ்சன் கையும் தடியுமாக வந்து, ஹேமசந்திர் பாபுவைப் பிடித்து வெளியே தள்ளினையப் புடைத்தான். இந்த கலவரையிலே தந்தையாகிய ஸூர்யகாந்த பாபுவும் வந்துவிட்டார், மகள் கீழே மூர்ச்சையுண்டு கிடந்தாள். வரும்போது குடித்துவந்த கள்ளின் வெறியாலும், அடிபட்ட கோபத்தாலும் ஹேமசந்திரன் ஏதோ வாய்க்கு வந்தபடி உளறினன். உடனே ஸூர்யகாந்தர் மனோரஞ்சனைப் பார்த்து, "ஏதடா! பையலே, நீ இங்கே ஏன் வந்தாய்? இதெல்லாம் என்ன குழப்பம்?" என்று கேட்டார். மனோரஞ்சன் "ஐயா, உமது குமாரத்தி மூர்ச்சையுண்டு விழுந்து கிடக்கிருள். இன்னும் சிறிதுநேரம் கவனியாமலிருந்தால் மிகவும் அபாயம் நேர்ந்துவிடும். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும். மற்ற விஷயங்கள் பிறகு பேசிக்கொள்ளலாம் என்ருன். அதன்படியே ஸூர்யகாந்தர் மகளை வீட்டிற்கு எடுத்துச் சென்று வேண்டிய சிகிச்சைகள் செய்ததின்பேரில் ஸ்வர்ணகுமாரிக்கு மூர்ச்சை தெளிந்தது. இரண்டு மணிநேரத்திற்கப்பால் ஸூர்ய பாபு வந்து மகளிடம் விசாரணை செய்ததில், அவள் நடந்த விஷயங்களை யெல்லாம் உண்மையாகத் தெரிவித்தாள். அவள் சொல்வதெல்லாம் மெய்யென்று அவருக்குப் புலப்பட்டுவிட்டது.

"அடடா! நமது குடும்பத்திற்குப் பெரிய அவமானமிழைக்கத் தெரிந்த பாதகனுக்கா பெண் கொடுக்க எண்ணியிருந்தேன்?" என்று தம்மைத் தாமே நொந்துகொண்டு ஸூர்யகாந்தர் சென்றுவிட்டார். மறுநாட் காலை மகளிடம் வந்து, "பெண்ணே, உனது மனோரஞ்சனை நான் நேற்றுத்தான் நன்ருக உற்றுப் பார்த்தேன். அவன் செல்வமில்லாது வறியனுயிருந்தபோதிலும், ரூபத்திலுைம், அழகிலுைம் நமக்கு மருமகனுயிருப்பதற்கு யோக்கியதை யுடையவனுகவே காணப்படுகிருன். அவன் ஹிந்து மார்க்கத்தினின்றும் நீங்கி பிரமஸமாஜத்தில் சேர்ந்துகொள்ளும் பட்சத்தில், உங்களிருவருக்கும் விவாகம் முடித்து வைப்பதில் எனக்கொரு ஆட்சேபமும் கிடையாதென்று அவனிடம் தெரிவித்துவிடு" என்று சொல்லிச் சென்றுவிட்டார். இது முறையே மனோரஞ்சனுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆயினுமென்ன பயன்? மனோரஞ்சன் தான் பிரமஸமாஜத்தில் சேர்ந்து கொள்ளுவானுயின் தனது தாய் மனமுடைந்து

இறந்து போவாளென்பதை நன்ருக அறிவான். எனவே தாயிடத்து அன்பு ஒரு புறமும், அவனது ஸ்வர்ண குமாரியின் மீது மையல் மற்ருெரு புறமும் அவனது மனதை இழுக்க, இன்ன செய்வதெனத் தெரியாமல் திகைப்பானுயினுன். இவ்வாறே ஒன்றரை வருஷ காலம் கழிந்துவிட்டது. இவன் கடைசி வரை பிரம சமாஜத்தில் சேராமலே யிருந்துவிடும் பட்சத்தில், தான் விவாகம் செய்துகொள்ளாமலே யிருந்துவிட வேண்டுமென ஸ்வர்ண குமாரி நிச்சயித்துக் கொண்டிருந்தாள்.

இப்படியிருக்க, 1906ம் வருஷம் கல்கத்தாவிலே காளிபூஜை திருவிழா நடந்துகொண்டிருந்த (நவராத்திரி) காலத்திலே, ஸ்வர்ண குமாரி, தனது வீட்டு அடியிலே ஒரு பஞ்சணைமீது சாய்ந்துகொண்டு 'ஸந்தியா' என்னும் தினசரிப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள். அதில் திடீரென அவளது கண்களுக்குப் பின்வரும் குறிப்புத் தென்பட்டது.

"சாந்பூர் வாசியாகிய ஸ்ரீயுத மனேரஞ்சன பானர்ஜி நேற்று மாலை பிரமசமாஜத்தில் சேர்ந்துவிட்டார். இவர் மிகுந்த திறமையும், புகழுமுள்ள அதி வாலிபராதலால், இவர் பிரிந்துவிட்ட விஷயம் எங்கே பார்த்தாலும் பேச்சாய்க் கிடக்கிறது."

மேற்கண்ட வரிகளைப் படித்தவுடனே ஸ்வர்ணகுமாரிக்குப் புளகமுண்டாய்விட்டது, ஆனந்த பரவசத்திலே அமிழ்ந்துவிட்டாள். உடனே மற்ருேரிடத்தில் மனேரஞ்சனுடைய பெயர் காணப்பட்டது. அது என்னவென்று பார்த்தாள்!

அதிலே,

"சென்ற சில தினங்களாக லோகமான்ய பால கங்காதர திலகர் பூனுவிலிருந்து நமது நகரத்திற்கு வந்து சுதேசியம், ஸ்வராஜ்யம் என்ற பெரு விஷயங்களைப்பற்றி பதினுயிரக்கணக்கான ஜனங்களின் முன்பு உபந்நியாசங்கள் புரிந்து வருகின்ருர். இவருக்கு நடக்கும் உபசாரங்களும் சிறப்புக்களும் முடியரசர்களுக்கும்கூட நடக்கமாட்டா. அப்படியிருக்க இவருடைய கோட்பாடுகளுக்கு விரோதமாக சில வாலிபர்கள், சாந்தபூர் ஸ்ரீ மனேரஞ்சன் பானர்ஜியின் அக்ராசனத்தின்கீழ் ஒரு எதிர்க்கூட்டங் கூட்டி இந்நகரத்தின் ஏதோ ஒரு மூலையில் சில நிபந்தனைத் தீர்மானங்கள் செய்துகொண்டார்களென அறிந்து விசனமடைகிருேம்" என இருந்தது.

இதைக் கண்டவுடனே ஸ்வர்ணகுமாரிக்கு மனம் பதைத்துவிட்டது. இவள் குழந்தை முதலாகவே ஸ்ரீ பாலகங்காதர திலகரைத் தெய்வம் போலக் கருதி வந்தாள். இவளுக்கு மனேரஞ்சனிடமிருந்த அன்பைக் காட்டிலும், சுதேசத்தின்மீதுள்ள அன்பு பதினுயிரமடங்கு வன்மையுடையது. சுதேச பக்தர்களின் திலகமாகிய பாலகங்காதர திலகருக்கு விரோதமாக உழைக்கின்ற சர்வஜன

விரோதியினிடமா நாம்இத்தனை நாள் காதல் கொண்டிருந்தோம் இவனையா மாசற்ற குமாரனென்றெண்ணி மதி மயங்கினோம்?" என்று பலவாறு யோசித்து மிகவும் வருந்து பவராயினள், இவள் நிலைமை இங்ஙனமாக.

தன் கண்போல் வளர்த்த ஒரே ஆசைக் குமாரன் ஹிந்து மார்க்கத்தைவிட்டு நீங்கிவிட்டானென்று கேள்வியுற்றவுடனே மனோரஞ்சனுடைய தாய் மூர்ச்சித்து விழுந்து இறந்து போய் விட்டாள்.

இந்தச் செய்தி கேட்டவுடனே அலறிக்கொண்டு சாந்த் பூருக்கு வந்த மனோரஞ்சன் தன் தாயின் கிரியைகளையெல்லாம், ஹிந்து ஆசாரங்களின்படி ஒரு பந்துவின் மூலமாக நடப்பித்துவிட்டு, ஸ்வர்ண குமாரியைப் பார்க்கச் சென்றான். அங்கே வீட்டில் ஸ்வர்ணகுமாரியில்லை. அவளுடைய தந்தை பின்வரும் கடிதத்தை மனோரஞ்சனிடம் கொடுத்தார்.

"எனது காதலனாயிருந்த மனோரஞ்சனுக்கு,

நெடுங்காலமாக உறங்கி நின்ற நமது சுதேச மாதா இப்போது கண் விழித்திருக்கிறாள். நமதுநாடு மறுபடியும் பூர்வகால மகிமைக்கு வருவதற்குரிய அரிய முயற்சிகள் செய்துவருகின்றது. இந்த முயற்சிகளுக்கு விரோதமிழைக்கும் சர்வஜனத் துரோகிகளின் கூட்டத்திலே, நீயும் சேர்ந்து விட்டாயென்று கேள்வியுற்றவுடனே எனது நெஞ்சம் உடைந்து போய்விட்டது. இனி உன்னைப்பற்றி வேறுவிதமான பிரஸ்தாபம் கேட்கும் வரை உன் முகத்திலே விழிக்க மாட்டேன். பெற்ற தாய்க்குச் சமானமான தாய்நாட்டின்மீது அன்புசெலுத்தாத நீ, என்மீது என்ன அன்பு செலுத்தப் போகிறாய்? நமது வாலிப எண்ணங்களைப்பற்றி நீ திருந்திய பிறகு யோசனை செய்து கொள்ளலாம். நான் காசியிலே என் அத்தை வீட்டிற்குச் சென்று ஒரு வருஷம் தங்கியிருக்கப் போகிறேன். அங்கே நீ என்னை வந்து பாராதிருக்கும்படி பிரார்த்தனை செய்து கொள்கிறேன்."

இங்ஙனம் இக் கடிதத்தைப் பார்த்தவுடனே மனோரஞ்சன் மனம் தீயிலகப்பட்ட புழுப்போலத் துடிக்கலாயிற்று.......

இப்போது மனோரஞ்சன் பூனாவிலே திலகரிடம் தேசபக்திப் பாடங்கள் படித்து வருகிறானென்று கேள்வியுறுகின்றோம்.

புதிய கோணங்கி

1. குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு ;
நல்ல காலம் வருகுது ; நல்ல காலம் வருகுது ;
சாதிகள் சேருது ; சண்டைகள் தொலையுது ;
சொல்லடி, சொல்லடி, சக்தி; மாகாளீ !
வேதபுரத் தாருக்கு நல்ல குறி சொல்லு.

2. தரித்திரம் போகுது ; செல்வம் வருகுது ;
படிப்பு வளருது ; பாவம் தொலையுது ;
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்;
போவான், போவான், ஐயோவென்று போவான்.

3. வேத புரத்திலே வியாபாரம் பெருகுது ;
தொழில் பெருகுது ; தொழிலாளி வாழ்வான் ;
சாத்திரம் வளருது ; சூத்திரம் தெரியுது ;
யந்திரம் பெருகுது ; தந்திரம் வளருது ;
மந்திர மெல்லாம் வளருது, வளருது ;

4. குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு ;
சொல்லடீ, சொல்லடீ, மலையாள பகவதீ !
அந்தரி, வீரி, சண்டிகை, சூலி !
குடுகுடு குடுகுடு.

5. குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு ;
சாமிமார்க் கெல்லாம் தைரியம் வளருது ;
தொப்பை சுருங்குது ; சுறுசுறுப்பு விளையுது,
எட்டு லச்சுமியும் ஏறி வளருது ;
பயந் தொலையுது, பாவந் தொலையுது ;
சாத்திரம் வளருது, சாதி குறையுது ;
நேத்திரம் திறக்குது, நியாயம் தெரியுது ;
பழைய பயித்தியம் படீலென்று தெளியுது ;
வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது ;
சொல்லடீ சக்தி, மலையாள பகவதி !
தர்மம் பெருகுது, தர்மம் பெருகுது.

—பாரதி.

தேனீக்களின் வாழ்க்கை

தேனீக்களுக்கு ஒவ்வொரு புறத்திலும் இரண்டு இறக்கைகள் இருக்கின்றன. அது பறக்கும்போது ஒரு நிமிஷத்துக்கு 16,000 தடவைகள் தனது இறக்கைகளை அடித்துக் கொள்கிறது.

தேனீக்களின் மோப்ப சக்திக்கு ஈடு இணையே கிடையாது. அதற்கு 5000 மூக்குத் துவாரங்கள் இருக்கின்றன, அரை மைல் தூரத்துக்கு அப்பால் பூத்திருக்கும் ஒரு மலரின் சுகந்தத்தைக் கூட அதனால் முகரமுடியும்.

தேனீக்கு ஐந்து கண்கள் இருக்கின்றன. மூன்று சாதாரணக் கண்களும் இரண்டு நுணுக்கமான கண்களும் உண்டு.

அதன் ஆயுள்காலம் சுமார் எட்டு வாரம். ராணி ஈயின் ஆயுள் காலம் மூன்று வருஷங்கள். அது ஒரு தினத்தில் தனது எடையைவிட இரண்டு மடங்கு அதிக எடையுள்ள முட்டைகளைப் பொறிக்கும். அதாவது, தினம் 3000 முட்டைகள் இடும். ஆயுள் காலம் முழுவதிலும் இரண்டு கோடி முட்டைகள் ஈடும். ராணி ஈ முட்டையிடும் முன்னதாகவே, ஆண் முட்டையா, பெண்முட்டையா என்பதைத் தெரிந்துகொண்டு விடுகிறது. அது சீதோஷ்ண நிலையை முன்கூட்டியே தெரிந்துகொண்டு, நல்ல பருவத்தில் அதிகமான முட்டைகளை இடுகின்றது.

ராணி ஈக்குப் பிறக்கும் முதல் இளவரசி தனது தங்கைகள் அனைத்தையும் குஞ்சு பொறிக்கும் முன்னதாகவே கொன்று விடுகிறது.

தேனீக்கள் தங்களுடைய வேலையைப் பகிர்ந்து கொள்கின்றன. சில தேனீக்கள் காவலர்களாகவும், சில நர்ஸுகளாகவும், சில தண்ணீர் சப்ளை செய்பவர்களாகவும், சில எஞ்சினீயர்களாகவும், வேலை செய்கின்றன. அந்தந்த வேலையைக் குறிப்பிட்ட தேனீக்கள்தான் செய்ய வேண்டும்.

இறந்த ஈக்கள் எல்லாம் மயானத்தில்தான் சேர்க்கப்படுகின்றன. தேனீக்கு வியாதி வந்தால், அது தானாகவே மயானத்துக்குப் பறந்து சென்று இறக்க வேண்டும். அவ்விதம் அது செய்யத் தவறினால் இதர ஈக்கள் அதைக் கொன்றுவிடும்.

ஒரே கூட்டில் பல ரகமான தேன்களைச் சேர்க்காது.

தேனீக்களுக்கு சுண்டெலிகளைக் கண்டால் ஒரே பயம்.

வயது சென்ற ஈக்கள் இறந்தால் இதர ஈக்கள் சோகம் அடைவதில்லை. ஆனால் சிறு குழந்தை ஈக்கள் மாண்டால் அவை கதறி அழுகின்றன.

கலை உலகம்

மங்கையர் திலகம்

—பட விமர்சனம்—

குத்தினால் ரத்தம் பிறக்கச் செய்யும் கூரிய சிறுமுள் இருந்தாலும், ரோஜாவைப் பறிக்க யாரும் தயங்குவதில்லை. அதைப் போல், சில்லறைக் குறைகள் நிறைய இருந்தாலும், நல்ல படமான 'மங்கையர் திலகம்' பார்க்க மக்கள் விரும்புவார்கள் என்று உறுதியுடன் சொல்லத் தயங்கவேண்டியதில்லை.

கதை

நிலவுக்கு களங்கம் இருப்பது போல, இந்த நல்ல படத்திற்கும் கவனிக்கப்படவேண்டிய, முக்கியமான, ஒரு பெருங்குறை இருக்கிறது. அது, இது தமிழ் எழுத்தாளனின் சொந்தக் கற்பனையல்ல, மராத்தியக் கதையொன்றின் தழுவல் என்பதேயாகும். இருப்பினும 'ஸினரியோ' தயாரித்து 'டைரக்ட்' செய்த பிரசாத்தின் திறமையால் அந்தக் குறை அதிகமாக வெளிப்படவில்லை.

கதை, மிகமிகச் சாதாரணமானது. இன்றைய சமூகத்தில் காணப்படும் குற்றங் குறைகளை, மிகைப்படாமல் சித்திரித்து, அதை நீக்குவதற்காக நாடு செல்லும் பாதை எது, மக்களுடைய பங்கு என்ன என்பதை 'மங்கையர் திலகம்' விளக்கவில்லை. அதே சமயத்தில், சீர்திருத்தம் - புதுமை என்ற வேஷத்தின் பெயரால் நடக்க முடியாத, கற்பனைக்கும் எட்டாத, தெளிவற்ற, உயிரில்லாத, ஏதோ ஒன்றை இந்தப் படம் சித்திரிக்கவில்லை. அருவியின் வேகம் இல்லை; ஆற்றின் ஓட்டமும் இல்லை; ஆனால், தேங்கி நிற்கும் நல்ல தண்ணீரைக் கொண்ட சுத்தமான ஏரியாக இருக்கிறது.

அண்ணன்-தம்பி நல்லுறவு, அண்ணியின் பேரன்பு, அடக்க முடியாத தாய்ப்பாசம் இதைச் சுற்றிதான் கதை ஓடுகிறது, கடைசியில், ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் ஒடிந்து விழுந்துவிடுகிறது. கதையின் முடிவை—குழந்தை ரவியை

சுலோசனா மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றிய விதம்—விஞ்ஞான வளர்ச்சியைக் கவனிக்கும் எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; எதிர்காலத்தில் ஏற்கவும் முடியாது. இந்த விஞேதை, விபரீத முடிவு தேங்கி நிற்கும் தண்ணீரில் விஷக் கிருமிகளுடன், சகிக்கமுடியாத துர்நாற்றமும் பிறக்க வழிகோலிவிட்டது. ஒளிவீசும் தங்கம் என்று நம்பியதை, தேய்த்து வைக்கப்பட்ட மின்னும் பித்தளே என்பதுபோல் ஆக்கிவிட்டது.

நடிப்பு

படத்தின் உயிர் சுலோசனா. அந்த கஷ்டமான பாத்திரத்தை ஏற்று நடிக்கும் பத்மினிக்கு, இது மிகச் சிறந்த, இதுவரையில் கிடைத்திராத பெரும் புகழைத் தரும் என்பதில் சந்தேகம் இல்லே. "எதிர்பாராதது" (தமிழ்), "ஸ்நேகஸீமா" (மலேயாளம்) படங்களேவிட, இதில் பாத்திரத்தை உணர்ந்து தெரிந்து உயர்ந்தமுறையில் நடித்திருக்கிருர்.

அவருக்கு அடுத்தபடியாக நம் கவனத்தைக் கவருவது, சின்ன வாசுவாக வரும் மாஸ்டர் பாஜி. அவன் பெண்பார்க்க வரும் கட்டமும், அண்ணியுடன் சண்டை போடும் இடமும் பலே ஜோர்.

அண்ணன் கருணுகரஞக நடிக்கும் சுப்பையா ஆரம்பத்தில் உணர்ச்சியுடன் நடித்திருக்கிருர். போகப்போக, அந்த நல்ல நடிப்பு போய்விடுகிறது.

புரபஸர் வாசுவாக வரும் கணேசன், நிறையச் சந்தர்ப்பமிருந்தும் பயன்படுத்திக் கொள்ளவில்லே. வழக்கம்போல், உணர்ச்சியான கட்டங்களில் அனுபவித்து நடித்திருக்கிருர்.

'ஹோல்டான்' தங்கவேலுவின் நடிப்பில் புதுமையில்லே. இருந்தாலும், அவர் கதைக்கு அவசியமான தேவையாகிவிட்டார். சோகமான கதையை உணர்ந்து அனுபவிக்கும்போது, பலத்த பெருஞ்சிரிப்பு—சில சமயங்களில் தியேட்டரே குலுங்குகிறது—இல்லாவிட்டால், நிச்சயம் பெருங் குறையாகத்தான் இருக்கும். சாரங்கபாணி, நாராயண பிள்ளே வந்துபோகின்றனர். கவனத்தைக் கவரவில்லே. ராகினி, ராஜம், கமலம்—பரவாயில்லே—நடிக்கின்றனர்.

பாட்டு

வசனம் சுமார். கதையோட்டத்தை தடுக்கும் வகையில் நிறையப் பாட்டுக்கள் இருக்கின்றன. 'நீலவண்ணக் கண்ணு வாடா' என்ற பாட்டுதான் ஓரளவிற்கு உதடுகளே அசைக்க வைக்கிறது.

கடைசியாக

படம், அதிக நீளம்—நம்ப முடியாத முடிவைக் கொண்டது. இருந்தாலும், நல்ல நடிப்பால் அந்த குறைகள் அதிகமாகத் தென்படுவதில்லே, பார்க்க வேண்டிய படங்களில் 'மங்கையர் திலகம்' ஒன்று என்பதில் சந்தேகம் இல்லே. —ப.நா.